# நபி (ஸல்) அவர்கள்

# தனது குடும்பத்தாருடன்

எழுதியவர்

அப்துல் அஸீஸ் அப்துல்லாஹ்
அழ்ழுபைஈ

தமிழில்

அபூ அப்திர்ரஹ்மான் எம். அஹ்மத்
(அப்பாஸி)

மீள்பரிசீலனை

எம். ஜே. எம். ரிஸ்மி (அப்பாஸி, M. A)

வெளியீடு

இஸ்லாமிய அழைப்பு நிலையம்

ரியாத் - ஸவூதி அரேபியா

# النبي ﷺ بين أهله

بقلم


عبد العزيز بن عبد الله الضبيعي


ترجمة

أبو عبد الرحمن أحمد بن محمد

مراجعة

محمد رزمي محمد جنيد


الناشر

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة

الرياض

المملكة العربية السعودية

# உள்ளே...


| | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | உள்ளே... | 03 |
| 2 | முன்னுரை | 06 |
| 3 | நபி (ஸல்) அவர்களின் குணங்கள் | 10 |
| 4 | அல்லாஹ்வை நினைவுகூரத் தூண்டுதல் | 11 |
| 5 | மிஸ்வாக், வுழூச் செய்யும் நீரை மனைவியர் எடுத்துக் கொடுத்தல் | 12 |
| 6 | கழிப்பிடத்திற்குள் நுழையும், வெளியேரும் போதும் கூறும் துஆ | 12 |
| 7 | நபியவர்கள்பயன்படுத்திய தலையணை | 13 |
| 8 | வீட்டிலிருந்து வெளியேரும் போதும் நபியவர்கள் கூறும் துஆ | 14 |
| 9 | நபியவர்களின் பேச்சு முறை | 15 |
| 10 | வலதை விரும்பும் நபி (ஸல்) அவர்கள் | 15 |
| 11 | வெண்ணிற ஆடை பற்றி உபதேசித்தல் | 16 |
| 12 | ஆகாரம் பற்றி மனைவியரிடத்தில் வினவல் | 16 |
| 13 | மனைவி மக்களை நேசித்து நல்வழி காட்டுதல் | 17 |
| 14 | நபியவர்களின் பணிவு | 21 |
| 15 | மனைவியரை மகிழ்வித்தல் | 21 |
| 16 | நபியவர்கள் உறங்கும் முறை | 23 |
| 17 | இரவுத்தொழுகை | 27 |
| 18 | நபியவர்கள் இரவில் தஹஜ்ஜுத் தொழ எழும்பினால் | 29 |

| | | |
|---|---|---|
| 19 | நபியவர்களின் இரவுத்தொழுகை பற்றி மனைவியர் | 33 |
| 20 | நபியவர்களின் (பொதுவான) வணக்கமுறைகள் பற்றி மனைவியர் | 37 |
| 21 | குடும்பத்தினர் மீது நபியவர்களின் வழிகாட்டலும் கருணையும் பரிவும் | 41 |
| 22 | நபியவர்களின் உயர்ந்த குணங்களும் அழகிய நடைமுறையும் | 42 |
| 23 | தர்மம் பற்றி குடும்பத்தினருக்கு வழிகாட்டல் | 44 |
| 24 | சன்மானங்களில் நபிவழி | 45 |
| 25 | அண்டை வீட்டாரின் உரிமை பற்றி நபியவர்கள் | 45 |
| 26 | சாந்தம், மென்மை, பொறுமை போன்றவற்றின்பால் தனது குடும்பத்தைத் தூண்டுதல் | 46 |
| 27 | நபியவர்களின் உணவுப்பழக்கம் | 48 |
| 28 | புறம் பேசுவதை விட்டும் தனது மனைவியரைத் தடுத்தல் | 54 |
| 29 | மனைவியரைக் கையாள்வதில் நபிவழி | 55 |
| 30 | நபியவர்களின் கனிவு | 62 |
| 31 | சிரத்தை எடுக்காமலிருத்தல் | 64 |
| 32 | நபியவர்களின் சிரமங்களில் மனைவியர் பங்கெடுத்தல் | 66 |
| 33 | பெண்பிள்ளைகளை வளர்ப்பதில் நபிவழி | 67 |
| 34 | உறவினர்களுடன் சேர்ந்து நடப்பதுபற்றி நபியவர்கள் | 69 |
| 35 | நபியவர்களின் பிரார்த்தனைகள் பற்றி மனைவியர் | 69 |
| 36 | ஓதிப்பார்த்தல், இரக்கம், அழுகை போன்றவற்றில் நபியவர்கள் | 71 |

| | | |
|---|---|---|
| 37 | தடுக்கப்பட்டவைகளை வீட்டிலிருந்து அப்புறப்படுத்தல் | 77 |
| 38 | தொழுகை, நன்கொடைகளில் நபியவர்களின் வழிகாட்டல் | 77 |
| 39 | முடிவுரை | 80 |

# முன்னுரை

புகழனைத்தும் ஏக வல்லவன் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் சமாதானமும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் குடும்பத்தினர் தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

இவ்வுலக வாழ்கையில் ஒவ்வொரு முஸ்லிமும் குடும்ப மகிழ்ச்சி நீடிப்பதையே விரும்புகின்றனர். இவ்வாறு விரும்புவோர் அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் பொன்மொழிகளைக் கூர்ந்து கவனிப்பது அவசியமாகும். நபி (ஸல்) அவர்கள், தன்னிடம், ஏனைய மனைவியரிடம், பணியாட்கள், உறவினர், உறவினரல்லாதோர் அனைவரிடமும் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை அவ்வன்னையார் எமக்குக் கூறகின்றனர். அவற்றை நீங்கள் கவனித்தால் நபியவர்கள் தனது மனைவியை மகிழ்விக்கும் பொருட்டு எந்தவொரு அனுமதியுள்ள சந்தர்ப்பத்தையோ விடயத்தையோ பயன்படுத்தாமல் விடமாட்டார்கள் என்பதை நீர் காணலாம். இறைவன் கூறுகின்றான்:

﴿لَّقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ ٱللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ﴾ الأحزاب: ٢١

"உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடத்தில் அழகிய முன்மாதிரி இருக்கின்றது." (அஹ்ஸாப் 21).

அறிஞர் அப்துர்ரஹ்மான் அஸ்ஸஃதீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் :"இறைத்தூதர்கள்தான் விசுவாசிகளைப் பண்படுத்தக் கூடியவர்கள். அவர்களின் கரங்கள் மூலமாகவே தவிர விசுவாசிகள் ஓர் அணுவளவேனும் நன்மையைப் பெற்றுக் கொள்ளவுமில்லை, தீங்கிலிருந்து பாதுகாப் பெடுத்துக் கொள்ளவுமில்லை. தன்னைப் பண் படுத்தி, தூய்மைப்படுத்தி, தனக்குக் கற்றுத் தந்த ஒருவரின் நிலையை அறியாதிருப்பது ஒரு விசுவாசிக்கழகல்ல.

ஒருவன் தனது பெற்றோரைப் பற்றி அறியாதிருப்பதும், தூரமாயிருப்பதும் வெறுக்கத் தக்கதென்றால், விசுவாசிகளுக்குத் தமதுயிரை விட மேலான நபியவர்களுடைய நிலமைகளைப் பற்றி அறியாதிருப்பது எவ்வளவு பெரிய வெறுக்கத்தக்க விடயம்? அல்லாஹ்வுக்கடுத்த படியாக ஏனைய எல்லா உரிமைகளையும் விட முன்னிலைப் படுத்த வேண்டிய உரிமைக்குச் சொந்தக்காரரான அந்த நபியவர்கள்தான் இவர்களின் உண்மையான தந்தையாக இருக்கின்றார்."

நபி (ஸல்) அவர்களின் வீடுகள் பல அறைகள், சமயலறை, மண்டபம் சாலை போன்றவற்றைக் கொண்டதாக இருக்கவில்லை. மாறாக, அவர்களது ஒன்பது மனைவியருக்குமாக ஒன்பது அறைகளே இருந்தன. இவ்வீடுகளின் கட்டுமானம் வெறும் களிமண்ணால் பூசப்பட்ட ஈத்தம்மட்டைகளைக் கொண்டே காணப்பட்டன. அதில் சில பகுதி ஏனைய வீடுகளிலிருந்து உடைந்து விழுந்த கற்களால் நிரப்பப்பட்டிருக்கும். கூரை முழுதும் ஈத்தம்மட்டைகளால்தான் அமைந்திருக்கும்.

ஹஸன் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :"நான் உஸ்மான் (ரலி) அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் நபியுடைய மனைவியர் வீடுகளுக்குச் செல்வேன். அதன் கூரையை எனது கையால் தொடுவேன். (1) (கையால் தொடுமளவு பணிந்ததாகவே அவ்வீடுகள் இருந்தன).

அவை பணிந்த வீடுகள்தாம். என்றாலும் இறைவிசுவாசத்தாலும் அறிவாலும் நிரம்பியிருந்த வீடுகள் அவை. தற்காலத்தில் எமது பல வீடுகளை நோட்டமிட்டால் கவலையான நிலமையையே காண முடியும். கணவன், மனைவிக்கிடையில்

1. தபகாதுல் குப்ரா 1/ 499- 501, (இப்னு ஸஃதுக்குரியது) அஸ்ஸீரா 2/ 274 (இப்னு கஸீருக்குரியது) .

பிரச்சினை. பிள்ளைகளுக்கு மத்தியில் பிரிவினை. பிள்ளைகள், வணக்க வழிபாடுகள் விடயத்தில் பராமுகம் (போன்ற இன்னோரன்ன சூழ்நிலைகளால் கவலைக்குரியதிவே உள்ளன).

இது, நபியவர்கள் தனது மனைவி, மக்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை விளக்கும் ஒரு சிறு தொகுப்பாகும். இதற்கு "**நபி (ஸல்) அவர்கள் தனது குடும்பத்தாருடன்** " என்று தலைப்பிட்டுள்ளேன்.

இந்நூல் மூலமும், இதனை வாசித்து, மக்கள் மத்தியில் பரவச் செய்தவர்களுக்கு அல்லாஹ் பயனளிக்க வேண்டுகிறேன்.

எழுதியவர்

அப்துல் அஸீஸ் அப்துல்லாஹ் அழ்ழுபைஈ

1435 முஹர்ரம்

தமிழாக்கம்

எம். அஹ்மத் (அப்பாஸி)

1437 ஸபர்

## நபி (ஸல்) அவர்களின் குணங்கள்

நபி (ஸல்) அவர்களுடைய குணங்களை சிறப்பாகவும், துல்லியமாகவும் அறிந்து வைத்திருக்கும் ஒருவர் இருக்குமென்றால் அது அன்னை ஆஇஷா (ரலி) அவர்களாகத்தான் இருக்க வேண்டும். உறக்கம் விழிப்பு, நோய் ஆரோக்கியம், கோபம் நிதானம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நபியவர்களுக்கு மிக நெருக்கமாக இருப்பவர் அன்னையவர்களே. அவர்கள் நபியுடைய குணங்களைப் பின்வருமாறு விபரிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் தீய பழக்கமுள்ளவராகவோ, தீய வார்த்தை பேசக்கூடியவராகவோ, சந்தைகளில் சத்தமிடக்கூடியவராகவோ இருந்ததில்லை. அவர்கள் பலிக்குப்பலி வாங்கமாட்டார்கள். மன்னித்து, பொருட்படுத்தாது விட்டுவிடுவார்கள் ".(1). அன்னையவர்களிடத்தில் நபியின் குணத்தைப் பற்றிக் கேட்க்கப்பட்ட போது "அவர்களுடைய குணம் அல்குர்ஆனாகவே இருந்தது என்றார்கள்".(2).

---

1. திர்மிதீ 2016. (அஷ்ஷேஹ் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.)
2. அஹ்மத் 24601.

## வீட்டினுள் நுழையும் போது அல்லாஹ்வை நினைவுகூரத் தூண்டுதல்

நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தான் கேட்டதாக ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "ஒருவர் தமது இல்லத்திற்குள் நுழையும் போதும் உணவு உண்ணும்போதும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால், ஷைத்தான் (தன் கூட்டத் தாரிடம்), "இன்றைய இரவில் உங்களுக்கு (இங்கே) தங்குமிடமும் இல்லை; உண்ண உணவுமில்லை" என்று கூறுகிறான். ஒருவர் வீட்டினுள் நுழையும் போது அல்லாஹ்வை நினைவுகூராவிட்டால் ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்), "இன்றைய இரவில் உங்களுக்குத் தங்குமிடம் கிடைத்து விட்டது" என்று சொல்கிறான். அவர் உணவு உண்ணும்போது அல்லாஹ்வின் பெயர் கூறா விட்டால் ஷைத்தான் "இன்றைய இரவில் நீங்கள் தங்கும் இடத்தையும் உணவையும் அடைந்து கொண்டீர்கள்" என்று சொல்கிறான்".[1]

மேற்கண்ட பொன்மொழியில் வீட்டினுள் நுழையும் போது அல்லாஹ்வை நினைவுகூர்வதால் அபிவிருத்தியும், ஷைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாப்பும் கிடைப்பதால் அதனைக் கடை

1. முஸ்லிம் 2018.

பிடிக்குமாறு நபியவர்கள் எங்களைத் தூண்டு கின்றார்கள்.

## மிஸ்வாக், வுழூச் செய்யும் நீர் போன்றவற்றை மனைவியர் எடுத்துக் கொடுத்தல்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் முதலில் பல் துலக்குவார்கள். "[1] மேலும் கூறுகின்றார்கள் : "நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்காக அவர்களது பல் துலக்கும் குச்சி, தண்ணீர் ஆகியவற்றைத் தயாராக எடுத்துவைப்போம். இரவில் அவர்களை அல்லாஹ் தான் நாடிய நேரத்தில் எழுப்புவான். அவர்கள் எழுந்து பல் துலக்கி, வுழூச் செய்துவிட்டுத் தொழுவார்கள்".[2]

## கழிப்பிடத்திற்குள் நுழையும் போதும் வெளியேரும் போதும் நபியவர்கள் கூறும் துஆ

அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "நபி (ஸல்) அவர்கள் கழிப்பிடத்திற்குள் நுழைய முற்படும் போது,

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الخُبُثِ وَالخَبَائِثِ

1. முஸ்லிம் 253.
2. முஸ்லிம் 746.

"அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் குப்ஸி வல் கபாஇஸ் " (இறைவா! (அருவருக்கத் தக்க செயல்கள், இழிவான எண்ணங்கள் ஆகியற்றைத் தூண்டும்) ஆண் பெண் ஷைத்தானி(ன் தீங்கி)லிருந்து உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்) என்று கூறுவார்கள்".[1] பாலைவனங்களில் இத்தேவையை நிறைவேற்ற நிலத்தில் அமரும் போதும் மேற்கண்ட பிரார்த்தனையை ஓதிக்கொள்ள வேண்டும்.

அன்னை ஆஇஷா(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் கழிப்பிடத்திலிருந்து வெளியேரும் போது "غُفْرَانَكَ குப்ரானக" உன்னிடத்தில் பாவமன்னிப்புத் தேடுகின்றேன் என்று கூறுவார்கள்".[2]

### நபியவர்கள்பயன்படுத்திய தலையணை

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உறங்கும் தலையணை, ஈச்ச நாரால் நிரப்பப்பெற்ற பதனிடப்பட்ட தோலால் அமைந்திருந்தது".[3]

---

1. புஹாரி 142 முஸ்லிம் 375.
2. அபூதாவூத் 30, திர்மிதீ 7, இப்னு மாஜா: 300.
3. முஸ்லிம் 2082.

## வீட்டிலிருந்து வெளியேரும் போது நபியவர்கள் கூறும் துஆ

அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் நபியவர்கள் மொழிந்ததாகக் கூறுகின்றார்கள்: "ஒரு மனிதர் வீட்டிலிருந்து வெளியேரும் போது

بِسْمِ اللَّهِ تَوَكَّلْتُ عَلَى اللَّهِ، لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ

"பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ் " (அல்லாஹ்வின் பெயரால் அவன்மீது பொறுப்புச் சாட்டியவனாக (வெளியேருகிறேன்). நன்மை செய்ய சக்தியோ பாவத்திலிருந்து மீள்தலோ அல்லாஹ்வைக் கொண்டே தவிர நடைபெற மாட்டாது.) என்று கூறினால் அச்சந்தர்ப்பத்தில், "நீ நேர்வழி காட்டப்பட்டு விட்டாய், நீ போதுமாக்கிக் கொள்ளப்பட்டு விட்டாய், நீ பாதுகாக்கப்பட்டு விட்டாய்" என்று கூறப்படும். அப்போது ஷைத்தான்கள் அவரை நோக்கிச் செல்வார்கள். நேர்வழி காட்டப்பட்டு,போதுமாக்கிக் கொள்ளப்பட்டு, பாதுகாக்கப்பட்டஒரு மனிதரை நீ எவ்வாறு நெருங்க முடியுமென மற்றுமொரு ஷைத்தான் கூறுவான்."[1]

1. அபூதாவூத் 5095, திர்மிதீ 3426.

## குடும்பத்தாருடனும் ஏனையோருடனும் நபியவர்கள் பேசும் முறை

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : " நீங்கள் ஹதீஸ்களை ஒன்றன் பின் ஒன்றாக வேகமாக அறிவிப்பதைப் போன்று நபியவர்கள் ஹதீஸ்களை வேகமாக அறிவித்த தில்லை."[(1)]

தனது பேச்சு மக்களுக்குப் புரிய வேண்டு மென்பதை விரும்பும் மென்மையான நளினமான ஒருவரே இந்த நபியவர்கள். ஒரு விடயத்தை முழுமையாக உள்வாங்கிக் கொள்வதிலும், அதனைக் கிரகித்துக் கொள்வதிலும் மக்களுக்கு மத்தியிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கவனிப்பது, நபியவர்கள் தனது சமூகத்தின் மீது கொண்டுள்ள பற்றுக்கான ஓர் எடுத்துக் காட்டாகும். இது அவர்களது பரிபூரண குணங்களில் உள்ள ஒன்று.

## வலதை விரும்பும் நபி (ஸல்) அவர்கள்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக் கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் தாம் செருப்பு அணிந்து கொள்ளும் போதும் தலைவாரிக் கொள்ளும் போதும் சுத்தம் செய்யும் போதும் தம்

1. புஹாரி 3568.

அனைத்துக் காரியங்களிலும் வலப்பக்கத்திலிருந்து தொடங்குவதையே விரும்பி வந்தார்கள்."[1]

## வெண்ணிற ஆடைகளை உபதேசித்தார்கள்

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "உங்களது ஆடைகளில் வெண்ணிறத்தையே (தேர்வு செய்து ) அணியுங்கள். அதுதான் உங்களது ஆடைகளில் சிறந்தது. உங்களில் மரணித்தோரைக் கபனிடவும் அவ்வெண்ணிற ஆடைகளையே பயன் படுத்துங்கள்".[2]

## ஆகாரம் பற்றி மனைவியரிடத்தில் வினவல்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக் கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் (சில சமயம் ) என்னிடம் வந்து, உம்மிடம் பகல்ப்போசனம் ஏதாவது இருக்கிறதா ? என வினவுவார்கள். நான் இல்லையென்று கூறுவேன். அவ்வாறெனில் நான் நோன்பிருக்கிறேன் எனக் கூறிவிடுவார்கள். அ(ன்னைய)வர்கள் கூறுகின்றார்கள் : ஒரு தினம் நபியவர்கள் என்னிடம் வந்ததும் "அல்லாஹ்வின் தூதரே, எங்களுக்கு அன்பளிப்பொன்று

1. புஹாரி 168 முஸ்லிம் 268.
2. அபூதாவூத் 4061, திர்மிதீ 994. (அஷ்ஷேஹ் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.)

கிடைத்துள்ளது" என்றேன். அதற்கு நபியவர்கள் "என்ன?" என வினவினார்கள். "ஹைஸ்[1]" என்று கூறினேன். "நான் இன்று நோன்பு வைத்துள்ளேன் " என்று கூறிவிட்டு (நோன்பை முறித்து ) அதனை உண்டார்கள்".[2] இது நபியவர்களின் தயாள குணத்திற்க்கோர் எடுத்துக்காட்டாகும். உணவு இல்லையென்று தனது மனைவியர் மீது பலியைப் போடவில்லை.

### மனைவி மக்களை நேசித்து நல்வழி காட்டுதல்

அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : (என் துணைவியாரான) ஃபாத்திமா அவர்கள் மாவரைக்கும் திருகையினால் தமக்கு ஏற்பட்ட வேதனையைக் குறித்து முறையிட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சில போர்க் கைதிகள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள் (அவர்களை நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம் களிடையே பங்கிட இருக்கின்றார்கள்) என்னும் செய்தி ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு எட்டியது. உடனே, அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் (அந்தப் போர்க் கைதிகளிலிருந்து) ஒரு பணியாளை

1.ஹைஸ் என்பது பேரீத்தம்பழம், வெண்ணெய், மோர் ஆகியவற்றைக் கலந்து செய்யும் ஒரு வகை உணவு.

2. திர்மிதீ 734, நஸாஈ 2322. (அஷ்ஷேஹ் அல்பானீ இதனை ஸஹீஹ் ஹஸன் எனக் கூறியுள்ளார்.)

(தமக்குக் கொடுக்கும்படி) கேட்கச் சென்றார்கள். ஆனால், நபி (ஸல்) அவர்கள் வீட்டில் இல்லாததால் அவர்களை ஃபாத்திமா (ரலி) அவர்களால் அந்த நேரத்தில் சந்திக்க முடியவில்லை. ஆகவே, ஆயிஷா (ரலி) அவர்களிடம் (தாம் வந்த காரணத்தைக்) கூறி(விட்டுத் திரும்பி)னார்கள். பின்னர், நபி (ஸல்) அவர்கள் வந்தவுடன் அவர்களுக்கு ஆயிஷா (ரலி) அவர்கள் விஷயத்தைச் சொன்னார்கள். (விபரமறிந்து கொண்ட) நபி (ஸல்) அவர்கள் நாங்கள் படுக்கைக்குச் சென்று விட்ட பின்னால் எங்களிடம் வருகை தந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் நாங்கள் எழுந்து நிற்க முனைந்தோம். நபி (ஸல்) அவர்கள், (எழுந்திருக்க வேண்டாம்.) உங்கள் இடத்திலேயே இருவரும் இருங்கள் என்று கூறினார்கள். (பிறகு) நான் அவர்களுடைய பாதத்தின் குளிர்ச்சியை என் நெஞ்சின் மீது உணர்ந்தேன். (அந்த அளவிற்கு எங்கள் அருகில் வந்து அமர்ந்து கொண்டார்கள்). பின்னர், நீங்கள் இருவரும் என்னிடம் கேட்டதை விடச் சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? நீங்கள் படுக்கைக்குச் செல்லும் போது, அல்லாஹு அக்பர் (அல்லாஹ் பெரியவன்) என்று முப்பத்து நான்கு முறையும், அல்ஹம்துலில்லாஹ்

(புகழனைத்தும் அல்லாஹ்விற்கே) என்று முப்பத்து மூன்று முறையும், சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் குறைகளிலிருந்து தூய்மையானவன்) என்று முப்பத்து மூன்று முறையும் சொல்லுங்கள். ஏனெனில், அது நீங்கள் இருவரும் என்னிடம் கேட்டதை விடச் சிறந்ததாகும் என்று சொன்னார்கள்.[1]

நான் நபியவர்களிடமிருந்து செவிமடுத்த நாள்முதல் அதனை விடவில்லையென அலீ (ரலி) அவர்கள் கூறியபோது "ஸிப்பீன்" போரின்போதுமா? என்று வினவப்பட்டது. ஆம் "ஸிப்பீன்" போரின் போதும் விடவில்லையெனக் கூறினார்கள்.

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்களின் துணைவியரில் ஒருவர் கூட விடுபடாமல் அனைவரும் நபி (ஸல்) அவர்(களின் இறப்பு நெருங்கியபோது அவர்)களுக்கு அருகில் இருந்தோம். அப்போது (நபியவர்களின் புதல்வி) ஃபாத்திமா (ரலி) அவர்கள் நடந்துவந்தார்கள். அவரது நடை சிறிதும் பிசகாமல் அப்படியே நபி (ஸல்) அவர்களின் நடையைப் போன்றே இருந்தது. ஃபாத்திமாவைக் கண்டதும் நபி (ஸல்) அவர்கள்,

1. புஹாரி 3113, முஸ்லிம் 2727.

"என் மகளே! வருக!" என்று வரவேற்றார்கள். பிறகு அவரை "தமது வலப் பக்கத்தில்' அல்லது "இடப் பக்கத்தில்' அமர்த்திக்கொண்டார்கள்."[1]

புன்முறுவல், நேசம், மதிப்பு கலந்த ஒரு வரவேற்பு, இவ்வாறுதான் பெண்பிள்ளைகளுடன் அன்பும் பரிவும் அமைய வேண்டும். எமது குழந்தைகள் தமக்கு உணவு, உடைகள் ஏற்பாடுசெய்து தருவதை மாத்திரம் எம்மிடம் எதிர் பாப்பதில்லை. மாறாக, அழகிய நடைமுறை, தமது பேச்சுக்களுக்குச் செவிசாய்த்தல், விருப்பங்களைப் பூர்த்தி செய்தல் போன்ற வற்றையே எதிர் பார்க்கின்றனர். "எங்கள் இறைவா! எங்கள் வாழ்க்கைத் துணைகளிலிருந்தும் , பிள்ளை களிலிருந்தும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியைத் தருவாயாக! (புர்கான் : 74).

1. முஸ்லிம் 2450.

## மனைவியருடன் சேர்ந்து குளிக்குமளவு நபியவர்களின் பணிவு

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக் கின்றார்கள் : "நானும் நபி (ஸல்) அவர்களும் ஒரே பாத்திரத்திலிருந்து குளித்தோம். அந்தப் பாத்திரத்திற்கு ஃபரக்[1] எனப்படுகிறது.[2]

மேலும் கூறினார்கள் : "நானும் நபி (ஸல்) அவர்களும் பெருந் துடக்குடையவர்களாய் இருக்கும் போது ஒரே பாத்திரத்திலிருந்து (தண்ணீர் அள்ளிக்) குளிப்போம். அது எனக்கும் அவர்களுக்கும் இடையே இருக்கும். அப்போது அவர்கள் என்னை முந்திக்கொண்டு தண்ணீர் அள்ளுவார்கள். அப்போது நான் எனக்கும் விட்டுவையுங்கள்; எனக்கும் விட்டு வையுங்கள் என்று கூறுவேன்."[3]

## மனைவியரை மகிழ்வித்தல்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக் கின்றார்கள்: "அல்லாஹ்வின் மீது ஆ ணையாக! (ஒரு பெருநாள் தினத்தன்று) நபி (ஸல்) அவர்களது பள்ளிவாசலி(ன் வளாகத்தி)ல் அபிசீனியர்கள் ஈட்டியெறிந்து (வீர விளையாட்டு) விளையாடிக்

1. ஃபரக் என்பது இரு கை கொள்ளளவு தண்ணீரின் பன்னிரண்டு மடங்காகும்.
2. புஹாரி 250, முஸ்லிம் 319.
3. முஸ்லிம் 321.

கொண்டிருந்தனர். அவர்களது விளையாட்டை நான் பார்ப்பதற்காக நபியவர்கள் எனது அறை வாசலில் நின்றபடி தமது மேல்துண்டால் என்னை மறைத்துக் கொண்டிருந்தார்கள். நானாக (விளையாட்டை ரசித்துச் சலிப்புற்று)த் திரும்பும்வரை எனக்காகவே அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். கேளிக்கைகள் மீது பேராவல் கொண்ட இளம்வயதுப் பெண் எவ்வளவு நேரம் வேடிக்கை பார்ப்பாள் என்பதை நீங்களே மதிப்பிட்டுக்கொள்ளுங்கள்".[1]

"இளம்வயதுப் பெண் ணை நீங்களே மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்" என்பதன் விளக்கம் : அவ்விளம் பெண் களியாட்டங்கள், விளையாட்டுக்களைக் கண்டுகழிக்க எவ்வளவு ஆசைப்படுவாள் என்பதை உணர்ந்து, அவளாகவே அதிலிருந்து விலகும்வரை கவனித்துக் கொள்ளுங்கள் என்பதாகும்.

மனைவி வேண்டிநிற்கும் சில விடயங்கள், தான் விரும்பா விட்டாலும் மார்க்கத்தில் தடையில்லாத பட்சத்தில் அதற்காக சலித்துக் கொள்ளக்கூடாது.

1. புஹாரி 5190, முஸ்லிம் 892.

## நபியவர்கள் உறங்கும் முறை

பர்ராஃ இப்னு ஆஸிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் உறங்கச் செல்லும்போது,

اللهُمَّ بِاسْمِكَ أَحْيَا، وَبِاسْمِكَ أَمُوتُ

"அல்லாஹும்ம! பிஸ்மிக்க அஹ்யா, வபிஸ்மிக்க அமூத்து (இறைவா! உனது பெயராலேயே உயிர் பெறுகிறேன்; உனது பெயர் கூறியே இறக்கிறேன்.) என்று கூறுவார்கள். உறக்கத்திலிருந்து விழித்தெழும்போது,

الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَحْيَانَا بَعْدَمَا أَمَاتَنَا، وَإِلَيْهِ النُّشُورُ

"அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃத மா அமாத்தனா வ இலைஹிந் நுஷூர் (அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே நம்மை இறக்கச்செய்த பின்னர் நமக்கு உயிரூட்டினான். மேலும், அவனிடமே செல்ல வேண்டியுள்ளது.) "என்று கூறுவார்கள்".[1]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நீங்கள் படுக்கைக்குச் சென்றால், உங்களது கீழங்கியின் ஓரத்தால் விரிப்பைத் தட்டிவிடுங்கள். ஏனெனில், நீங்கள் இல்லாதபோது உங்களது விரிப்பில் என்ன

1. முஸ்லிம் 2711.

(விஷ ஜந்து) புகுந்துகொண்டது என்பது உங்களுக்குத் தெரியாது. பிறகு

بِاسْمِكَ رَبِّ وَضَعْتُ جَنْبِي وَبِكَ أَرْفَعُهُ، إِنْ أَمْسَكْتَ نَفْسِي فَارْحَمْهَا، وَإِنْ أَرْسَلْتَهَا فَاحْفَظْهَا بِمَا تَحْفَظُ بِهِ عِبَادَكَ الصَّالِحِينَ

பிஸ்மிக ரப்பீ வள..த்து ஜன்பீ, வபிக அர்..பஉஹு, இன் அம்ஸக்த்த ந..ப்ஸீ ..பர்ஹம்ஹா. வஇன் அர்ஸல்த்தஹா ..பஹ்..பழ்ஹா பிமா தஹ்..பழு பிஹீ இபாதக்கஸ் ஸாலிஹீன்" என்று கூறுவீராக. [1]

பொருள்: என் இரட்சகா! உன் பெயரால் என் விலாவை (தரையில்) வைத்தேன். உன் உதவியாலேயே (மீண்டும்) எழுவேன். என் உயிரை நீ கைப் பற்றிக்கொண்டால், அதற்குக் கருணை காட்டுவாயாக! அதை நீ (உன் வசம் வைத்துக் கொள்ளாமல்) விட்டுவிட்டால், உன் நல்லடியார் களை எதன் மூலம் பாதுகாப்பாயோ அதன் மூலம் என் உயிரையும் காத்திடுவாயாக!

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் தமது படுக்கைக்கு (உறங்கச்) சென்றால் ஒவ்வோர் இரவிலும் தமது உள்ளங்கைகளை இணைத்து,

1. புஹாரி 6320, முஸ்லிம் 2714.

அதில் குல் ஹுவல்லாஹு அஹத்', குல் அஊது பிரப்பில் ஃபலக்', குல் அஊது பிரப்பின்னாஸ்' ஆகிய (112, 113, 114) அத்தியாயங்களை ஓதி ஊதிக் கொள்வார்கள். பிறகு தம் இரு கைகளால் (அவை எட்டும் அளவிற்கு) தமது உடலில் இயன்ற வரையில் தடவிக் கொள்வார்கள். முதலில் தலையில் ஆரம்பித்து, பிறகு முகம், பிறகு தம் உடலின் முற்பகுதியில் கைகளால் தடவிக் கொள்வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள்".[1]

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி(ஸல்) அவர்கள் ரமழானின் (ஃபித்ரா) ஸகாத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். அப்போது யாரோ ஒருவன் என்னிடம் வந்து அந்த (ஸகாத்) உணவுப் பொருளை அள்ளலானான். உடனே அவனை நான் பிடித்து, உன்னை நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு செல்லப் போகிறேன்' என்று சொன்னேன்' என்று கூறிவிட்டு, -அந்த நிகழ்ச்சியை முழுமையாகக் குறிப்பிட்டார்கள்.- (இறுதியில், திருட வந்த) அவன், நீங்கள் படுக்கைக்குச் செல்லும் போது ஆயத்துல் குர்ஸீயை ஓதுங்கள்! (அவ்வாறு செய்தால்,) விடியும் வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து (உங்களைப்

1. புஹாரி 5017.

பாதுகாக்கின்ற) காவலர் (வானவர்) ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார்; எந்த ஷைத்தானும் உங்களை நெருங்க மாட்டான் என்று கூறினான். (இதை நான் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்தேன்). அப்போது நபியவர்கள், அவன் பெரும் பொய்யனாயிருப்பினும் அவன் உம்மிடம் உண்மையைத்தான் சொல்லி யிருக்கின்றான்; (உம்மிடம் வந்த) அவன்தான் ஷைத்தான் என்று கூறினார்கள்.[1]

பர்ரா.ஃ இப்னு ஆஸிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதரிடம், நீ இரவில் படுக்கைக்கு (உறங்க)ச் செல்லும்போது,

اللَّهُمَّ أَسْلَمْتُ نَفْسِي إِلَيْكَ، وَفَوَّضْتُ أَمْرِي إِلَيْكَ، وَوَجَّهْتُ وَجْهِي إِلَيْكَ، وَأَلْجَأْتُ ظَهْرِي إِلَيْكَ، رَغْبَةً وَرَهْبَةً إِلَيْكَ، لاَ مَلْجَا وَلاَ مَنْجَا مِنْكَ إِلَّا إِلَيْكَ، آمَنْتُ بِكِتَابِكَ الَّذِي أَنْزَلْتَ، وَبِنَبِيِّكَ الَّذِي أَرْسَلْتَ

"அல்லாஹும்ம! அஸ்லம்த்து ந.ஃப்ஸீ இலைக்க, வ.ஃபவ்வள்த்து அம்ரீ இலைக்க வவஜ்ஜஹ்த்து வஜ்ஹீ இலைக்க, வஅல்ஜ.ஃத்து ழஹ்ரீ இலைக்க, ரக்.ஃபதன் வரஹ்பதன் இலைக்க. லா மல்ஜஅ வலா மன்ஜா மின்க்க இல்லா இலைக்க, ஆமன்த்து பிகித்தாபிக்கல்லதீ அன்ஸல்த்த.ஃ வபி நபிய்யிக் கல்லதீ அர்ஸல்த்த.ஃ' 'என்று சொல்லும்படி

1. புஹாரி 5010.

உத்தரவிட்டார்கள். "அவர் (இவ்வாறு பிரார்த்தித்து விட்டு உறங்கும்போது) இறந்துவிட்டால் (இஸ்லாம் எனும்) இயற்கை மரபில் இறந்தவராவார்" என்றும் கூறினார்கள்.[1]

பொருள்: இறைவா! என்னை நான் உன்னிடம் ஒப்படைத்தேன். என் காரியங்கள் அனைத்தையும் உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன்.என் முகத்தை உன்னளவில் திருப்பிவிட்டேன். எனது முதுகை உன்னளவில் சாய்த்துவிட்டேன். உன்மீதுள்ள ஆர்வத்திலும் அச்சத்திலும்தான் (இவற்றை நான் செய்தேன்). உன்னிடமிருந்து தப்பிக்கவும் ஒதுங்கிடவும் உன்னைத் தவிர வேறு போக்கிடம் இல்லை. நீ அருளிய உன்னுடைய வேதத்தையும் நீ அனுப்பிய உனது நபியையும் நான் நம்பினேன்.

## இரவுத்தொழுகை

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் ஒருதினம் நபி (ஸல்) அவர்களிடம் இராத் தங்கினார்கள். நபியவர்கள் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து பல் துலக்கி, வுழூச் செய்து,

1. புஹாரி 6313, முஸ்லிம் 2710.

﴿ إِنَّ فِي خَلْقِ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ وَٱخْتِلَٰفِ ٱلَّيْلِ وَٱلنَّهَارِ لَءَايَٰتٍ لِّأُو۟لِى ٱلْأَلْبَٰبِ ﴾ آل عمران: ١٩٠

"திண்ணமாக வானங்கள் மற்றும் பூமியின் படைப்(பு அமைப்)பிலும், இரவு-பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்குப் பல சான்றுகள் உள்ளன" எனும் (3:190ஆவது) வசனத்தை, அந்த அத்தியாயத்தின் இறுதிவரை ஓதி முடித்தார்கள். பின்னர் எழுந்து நின்று இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள். அவற்றில் நீண்ட நேரம் நிலையில் நின்றார்கள்; ருகூஉச் செய்தார்கள்; சஜ்தாவும் செய்தார்கள். பிறகு திரும்பிச் சென்று குறட்டை விட்டு உறங்கினார்கள். இவ்வாறே மூன்று முறை செய்து, ஆறு ரக்அத்கள் தொழுதார்கள். ஒவ்வொரு தடவையும் பல் துலக்கி, வுழூச்செய்து இந்த வசனங்களை ஓதினார்கள். பிறகு மூன்று ரக்அத் வித்ர் தொழுதார்கள். முஅஸ்ஸின் (சுப்ஹூத் தொழுகைக்காக) அதான் சொன்னதும் (வீட்டிலிருந்து) புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது

اللَّهُمَّ اجْعَلْ فِي قَلْبِي نُورًا، وَفِي بَصَرِي نُورًا، وَفِي سَمْعِي نُورًا، وَعَنْ يَمِينِي نُورًا، وَعَنْ يَسَارِي نُورًا، وَفَوْقِي نُورًا، وَتَحْتِي نُورًا، وَأَمَامِي نُورًا، وَخَلْفِي نُورًا، وَاجْعَلْ لِي نُورًا.

"அல்லாஹும்மஜ்அல் ஃபீ கல்பீ நூரன். வஃபீ லிசானீ நூரன். வஜ்அல் ஃபீ சம்ஈ நூரன். வஜ்அல் ஃபீ பஸரீ நூரன். வஜ்அல் மின் கல்ஃபீ நூரன். வமின் அமாமீ நூரன். வஜ்அல் மின் ஃபவ்க்கீ நூரன். வமின் தஹ்த்தீ நூரன். அல்லாஹும்ம அஃத்தினீ நூரா" என்று கூறினார்கள்.[1]

**பொருள்:** இறைவா! என் இதயத்திலும் என் நாவிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. என் செவியிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. என் பார்வையிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. எனக்குப் பின்னாலும், எனக்கு முன்னாலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. எனக்கு மேலேயும், எனக்குக் கீழேயும் ஒளியை ஏற்படுத்துவாயாக. இறைவா! எனக்கு ஒளியை வழங்குவாயாக.

## நபியவர்கள் இரவில் தஹஜ்ஜுத் தொழ எழும்பினால்

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதைத் தான் கேட்டதாக தாவூஸ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுவதற்காக இரவில் எழுந்ததும் பின்வருமாறு பிரார்த்திப்பார்கள்:

1. புஹாரி 6316, முஸ்லிம் 763.

اللَّهُمَّ لَكَ الحَمْدُ أَنْتَ قَيِّمُ السَّمَوَاتِ وَالأَرْضِ وَمَنْ فِيهِنَّ، وَلَكَ الحَمْدُ لَكَ مُلْكُ السَّمَوَاتِ وَالأَرْضِ وَمَنْ فِيهِنَّ، وَلَكَ الحَمْدُ أَنْتَ نُورُ السَّمَوَاتِ وَالأَرْضِ وَمَنْ فِيهِنَّ، وَلَكَ الحَمْدُ أَنْتَ مَلِكُ السَّمَوَاتِ وَالأَرْضِ، وَلَكَ الحَمْدُ أَنْتَ الحَقُّ وَوَعْدُكَ الحَقُّ، وَلِقَاؤُكَ حَقٌّ، وَقَوْلُكَ حَقٌّ، وَالجَنَّةُ حَقٌّ، وَالنَّارُ حَقٌّ، وَالنَّبِيُّونَ حَقٌّ، وَمُحَمَّدٌ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حَقٌّ، وَالسَّاعَةُ حَقٌّ، اللَّهُمَّ لَكَ أَسْلَمْتُ، وَبِكَ آمَنْتُ، وَعَلَيْكَ تَوَكَّلْتُ، وَإِلَيْكَ أَنَبْتُ، وَبِكَ خَاصَمْتُ، وَإِلَيْكَ حَاكَمْتُ، فَاغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ، وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ، أَنْتَ المُقَدِّمُ، وَأَنْتَ المُؤَخِّرُ، لاَ إِلَهَ إِلَّا أَنْتَ .

அல்லாஹும்ம! லகல் ஹம்து. அன்த்த கய்யிமுஸ் ஸமாவாதி, வல்அர்ளி, வமன் ஃபீஹின்ன. வலகல் ஹம்து. லக முல்க்குஸ் ஸமாவாதி, வல்அர்ளி, வமன் ஃபீஹின்ன. வலகல் ஹம்து. அன்த்த நூருஸ் ஸமாவாதி வல்அர்ள் வமன் ஃபீஹின்ன. வலகல் ஹம்து. அன்த்த மலிக்குஸ் ஸமாவாதி வல்அர்ள். வலகல் ஹம்து. அன்த்தல் ஹக்கு. வவஃதுகல் ஹக்கு. வலிஆஉக்க ஹக்குன். வகவ்லுக ஹக்குன். வல்ஜன்னத்து ஹக்குன். வந்நாரு ஹக்குன். வந்நபிய்யூன ஹக்குன். வமுஹம்மதுன் (ஸல்) ஹக்குன். வஸ்ஸாஅத்து ஹக்குன். அல்லாஹும்ம! லக அஸ்லம்த்து, வபிக அமன்த்து, வஅலைக்க தவக்கல்த்து, வஇலைக்க அனப்து, வபிக காஸம்த்து, வஇலைக்க ஹாகம்த்து. ஃபக்பிர்லீ மா கத்தம்த்து, வமா அக்ஃகஃர்த்து, வமா அஸ்ரர்த்து, வமா

அ்ஃலன்த்து. அன்த்தல் முகத்திமு, வஅன்த்தல் முஅக்ஃகிஃரு. லா இலாஹ இல்லா அன்த்த.[1]

**பொருள்:** இறைவா! உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள், பூமி அவற்றில் உள்ளவை அனைத்தையும் நிர்வகிப்பவன் நீயே! உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள் பூமி அவற்றில் உள்ளவை அனைத்துக்கும் உரிமையாளன் நீயே! உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள் பூமி ஆகியவற்றின் ஒளி நீயே! உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள் பூமிக்கு அரசன் நீயே! உனக்கே புகழ் அனைத்தும். நீ உண்மை. உன் வாக்குறுதி உண்மை. உனது தரிசனம் உண்மை. உனது கூற்று உண்மை. சொர்க்கம் உண்மை. நரகம் உண்மை. நபிமார்கள் உண்மை. முஹம்மத் (ஸல்) அவர்கள் உண்மை. மறுமை உண்மை. இறைவா! உனக்கே கட்டுப் பட்டேன். உன் மீதே நம்பிக்கை கொண்டுள்ளேன். உன்னையே சார்ந்துள்ளேன். உன்னிடமே திரும்புகிறேன். உன்னிடமே வழக்காடுவேன். உன்னிடமே நீதி கேட்பேன். எனவே நான் முந்திச் செய்த, பிந்திச் செய்கின்ற, இரகசியமாகச் செய்த, பகிரங்கமாகச் செய்த பாவங்களை மன்னிப்பாயாக! நீயே முற்படுத்துபவன்.

1. புஹாரி 1120, முஸ்லிம் 729.

பிற்படுத்துபவன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை.

இது மிக நீண்ட ஹதீஸாக இருக்கின்றதே. எங்களால் மனனம் செய்ய முடியாதே என்று சிலர் வினவலாம். அவர்களுக்கு நாம் கூறுவதென்ன வென்றால், அல்லாஹ் உங்களுக்கு பரகத் செய்வானாக. இதனை ஒரு தாளில் எழுதி நீங்கள் உறங்குமிடத்தில் வைத்துக் கொள்ளுங்களேன்.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம், "நபி (ஸல்) அவர்கள் இரவுத் தொழுகையைத் துவக்கியதும் முதலில் என்ன கூறுவார்கள்?" என்று கேட்கப் பட்டது. அதற்கு அவர்கள், "நபி (ஸல்) அவர்கள் இரவுத் தொழுகையைத் துவக்கியதும்

اللهُمَّ رَبَّ جَبْرَائِيلَ، وَمِيكَائِيلَ، وَإِسْرَافِيلَ، فَاطِرَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ، عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ، أَنْتَ تَحْكُمُ بَيْنَ عِبَادِكَ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ، اهْدِنِي لِمَا اخْتُلِفَ فِيهِ مِنَ الْحَقِّ بِإِذْنِكَ، إِنَّكَ تَهْدِي مَنْ تَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ.

"அல்லாஹும்ம ரப்ப ஜப்ராயீல வமீக்காயீல வஇஸ்ரா∴பீல, ∴பாத்திரஸ் ஸமாவாத்தி வல்அர்ளி, ஆலிமல் ∴கைபி வஷ்ஷஹாதத்தி, அன்த தஹ்குமு பய்ன இபாதிக ∴பீமா கானூ ∴பீஹி யக்தலி∴பூன். இஹ்தினீ லிமக்துலி∴ப ∴பீஹி மினல் ஹக்கி பிஇத்னிக, இன்னக தஹ்தீ மன் தஷாஉ இலா

ஸிராதிம் முஸ்தகீம்' என்று கூறுவார்கள்" என்று பதிலளித்தார்கள்.[1]

**பொருள்:** இறைவா! (வானவர்களாகிய) ஜிப்ராயீல், மீக்காயீல், இஸ்ரா∴பீல் ஆகியோரின் அதிபதியே! வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றிப் படைத்தவனே! மறைவான வற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! நீ உன் அடியார்களிடையே அவர்கள் கொண்டிருந்த கருத்துவேறுபாடுகள் குறித்து (மறுமையில்) தீர்ப்பு வழங்குவாய். (பிற மக்களால்) மாற்றுக் கருத்து கொள்ளப்பட்டாலும் சத்திய (மார்க்க)த்திலேயே உன் தயவால் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக! நீ நாடியவர்களை நேரான வழியில் நீயே செலுத்துகிறாய்.

ரமழான் இரவுத்தொழுகையிலும் ஆரம்பத்தில் இதனை ஓதிக்கொள்ள வேண்டும்.

## நபியவர்களின் இரவுத்தொழுகை பற்றி மனைவியர்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் தம் பாதங்கள் வீங்கும் அளவிற்கு நின்று வணங்குவார்கள். ஆகவே நான், ஏன் இப்படிச்

1. முஸ்லிம் 770.

செய்கிறீர்கள், அல்லாஹ்வின் தூதரே! தங்களின் முந்தைய பிந்தைய தவறுகளை அல்லாஹ் மன்னித்து விட்டானே? என்று கேட்டேன். அவர்கள், நான் நன்றியுள்ள அடியானாக இருக்க விரும்பவேண்டாமா? என்று கேட்டார்கள். (தம் வாழ்நாளின் கடைசிக் காலத்தில்) நபி (ஸல்) அவர்களின் உடல் சதை போட்ட போது அமர்ந்து தொழுதார்கள். ருகூஉ செய்ய நினைக்கும் போது, எழுந்து (சிறிது நேரம்) ஓதுவார்கள். பிறகு, ருகூஉ செய்வார்கள்.[1]

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "நபி (ஸல்) அவர்களின் விரிப்பில் குறுக்கே உறங்கிக் கொண்டிருக்கையில் நபி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருப்பார்கள். அவர்கள் வித்ருத் தொழ எண்ணும் போது என்னை எழுப்புவார்கள் (அதன் பின்) நான் வித்ருத் தொழுவேன்.[2]

அஸ்வத்(ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்களின் இரவுத்தொழுகை எவ்வாறு இருந்ததென நான் அன்னை ஆஇஷா (ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கவர்கள், இரவின் ஆரம்பப் பகுதியில் நபி (ஸல்) அவர்கள்

1. புஹாரி 4837, முஸ்லிம் 2820.
2. புஹாரி 512, முஸ்லிம் 512.

உறங்குவார்கள். இரவின் இறுதிப் பகுதியில் எழுந்து தொழுவார்கள். பிறகு தமது படுக்கைக்குத் திரும்புவார்கள். முஅத்தின் அதான் (பாங்கு) சொன்னதும் விரைவாக எழுந்து குளிக்க வேண்டிய அவசியம் இருந்தால் குளிப்பார்கள். இல்லா விட்டால் வுழூச் செய்து விட்டு (தொழுகைக்காகப்) புறப்பட்டுவிடுவார்கள் என்று பதிலளித்தார்கள்.[1]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக உபாதத் இப்னு ஸாமித்(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : இரவில் உறக்கம் கலைந்தவர் வாய்விட்டு

لاَ إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، الحَمْدُ لِلَّهِ، وَسُبْحَانَ اللَّهِ، وَلاَ إِلَهَ إِلَّا اللَّهُ، وَاللَّهُ أَكْبَرُ، وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلَّا بِاللَّهِ

"லாயிலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லாஷரீக்க லஹு,லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். அல்ஹம்துலில்லாஹி, வஸுப்ஹானல்லாஹி, வ லாஇலாஹ இல்லல்லாஹு. வல்லாஹு அக்பர். வலா ஹவ்ல, வலா குவ்வத்த இல்லா பில்லாஹ் என்று கூறிவிட்டு اللهم اغْفِرْ لِيْ, அல்லாஹும்ம ஃக்பிர்லீ (இறைவா! எனக்கு மன்னிப்பு அளிப்பாயாக!) என்றோ அல்லது வேறு பிரார்த்தனையோ புரிந்தால் அவை அங்கீகரிக்கப்படும். அவர் வுழூச்

1. புஹாரி 1146, முஸ்லிம் 739.

செய்(து தொழுதால் அத்தொழுகை ஒப்புக் கொள்ளப்படும்".[1]

**பொருள்** :(உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன்) அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன்;அவனுக்கு இணையானவர் எவரும் இல்லை; ஆட்சியதிகாரம் அவனுக்குரியது; புகழ் அனைத்தும் அவனுக்கே உரியது; அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் உள்ளவன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்லாஹ் மிகத்தூயவன்; அவனைத் தவிர (உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன்) வேறு இறைவனில்லை. அல்லாஹ் மிகப் பெரியவன்; அல்லாஹ்வின் உதவியின்றி பாவத்தி லிருந்து விலகவோ நன்மை செய்யும் ஆற்றலோ இல்லை.

இரவிலே குழந்தை அழும்போதோ அல்லது வேறு இடையூறு விளைவிக்கும் சத்தத்தின் போதோ விழிப்போருக்கு இது முக்கியமான ஒரு நபிமொழியாகும். இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பாலாக்காமலிருக்கும் பொருட்டு, மறந்துவிடாமல் (எழுதி) தான் தூங்குமிடத்தில் வைத்தால் மிகவும் சிறந்தது.

1. புஹாரி 1154.

## நபியவர்களின் (பொதுவான) வணக்கமுறைகள் பற்றி மனைவியர்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்) அவர்கள் ஃபஜ்ருடைய இரண்டு ரக்அத் ( ஸுன்னத்கள்) அளவிற்கு வேறு எந்த கூடுதல் தொழுகைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்ததில்லை.[1]

மேலும் அன்னையவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்தில் (தமது மனைவியருடன்) தாம்பத்திய உறவில் ஈடு பட்டதால் பெருந்துடக்குடையவர்களாக ஃபஜ்ர் நேரத்தை அடைவார்கள். பின்னர் குளித்துவிட்டு நோன்பைத் தொடருவார்கள்".[2]

மேலும் அன்னையவர்கள் "நபி (ஸல்) அவர்கள்நோன்பிருக்கும் நிலையில்தமது மனைவியரில் சிலரை முத்தமிடுவார்கள்" என்று கூறிவிட்டு சிரித்தார்கள். [3]

மேலும் அன்னையவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் குர்ஆனின் (110ஆவது அத்தியாயமாகிய ஸூரா அந்நஸ்ரிலுள்ள) கட்டளையைச் செயல்படுத்தும் முகமாக, தமது

1. புஹாரி 1169.
2. புஹாரி 1926, முஸ்லிம் 1109.
3. புஹாரி 1928.

(தொழுகையின்) ருகூ:ஃவிலும் ஸஜ்தாவிலும் அதிகமாக

سُبْحَانَكَ اللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اللَّهُمَّ اغْفِرْ لِي

"ஸுப்ஹானக்கல் லாஹும்ம ரப்பனா வபிஹம்திக்க, அல்லாஹும்ம ஹ்ஃபிர்லீ" (இறைவா! எங்கள் அதிபதியே! நீ தூயவன்; உன்னைப் போற்று கின்றோம். இறைவா எனக்கு மன்னிப்பளிப்பாயாக!) என்று அதிகமாகக் கூறிவந்தார்கள்.[1]

மேலும் அன்னையவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள்பெருந்துடக்கு எற்பட்டு (குளியல் கடமையாகி) இருக்கும்போது உண்ணவோ உறங்கவோ விரும்பினால் (முன்னதாக) தொழுகைக்கு வுழூச் செய்வதைப் போன்று வுழூச்செய்து கொள்வார்கள்.[2]

மேலும் அன்னையவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் (ரமழானின் கடைசிப்) பத்து நாட்கள் வந்து விட்டால் இரவை (அல்லாஹ்வைத் தொழுது) உயிர்ப்பிப்பார்கள்; (இறைவனை வணங்கு வதற்காகத்) தம் குடும்பத்தாரை எழுப்பி விடுவார்கள்! (இல்லறத் தொடர்பை நிறுத்தி வணக்கத்தில்) முயற்சி எடுத்துக் கொள்வார்கள்.[3]

1. புஹாரி 817, முஸ்லிம் 848.
2. முஸ்லிம் 305.
3. புஹாரி 2024, முஸ்லிம் 1174.

அல்கமா (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : அன்னை ஆஇஷா (ரலி)அவர்களிடம் நான், நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட சில நாட்களை வணக்கவழிபாட்டிற்காகத் தேர்ந்தெடுத்துக் கொள் வார்களா? என்று கேட்டேன். அதற்கவர்கள் இல்லை! அவர்களின் வணக்கவழிபாடு (-அமல்) நிரந்தரமானதாக இருக்கும்! நபி (ஸல்) அவர்களால் செய்ய முடிந்த (வணக்கத்)தை உங்களில் யார்தான் செய்ய முடியும்? என்று கூறினார்கள்.(1)

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "(இனி) நோன்பை விடவே மாட்டார்கள் என்று நாங்கள் கூறுமளவுக்கு நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்பார்கள்; (இனி) நோன்பு நோற்கவே மாட்டார்கள் என்று நாங்கள் கூறுமளவுக்கு நோன்பை விட்டு விடுவார்கள்! ரமழானைத் தவிர வேறெந்த மாதத்திலும் முழு மாதமும் நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை; ஷஃபான் மாதத்தில் தவிர (வேறெந்த மாதத்திலும்) அதிகமாக அவர்கள் நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை.(2)

1. புஹாரி 1987.
2. புஹாரி 1969, முஸ்லிம் 1156.

அன்னை மைமூனா பின்துல் ஹாரிஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் ஸஜ்தாச் செய்யும்போது தம் அக்குள்களின் வெண்மையைப் பின்னாலிருப்பவர் பார்க்கும் அளவுக்குக் கைகளை அகற்றி வைப்பார்கள்.[1]

அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்) அவர்கள் நோன்புப்பெருநாள் தினத்தில் சில பேரீச்சம் பழங்களை உண்ணாமல் (தொழுகைக்குப்) புறப்பட மாட்டார்கள்".[2]

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் அறிவிக் கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் தனது அனைத்து நேரங்களிலும் அல்லாஹ்வை நினைவுகூர்பவராக இருந்தார்கள்.[3]

---

1. முஸ்லிம் 497.
2. புஹாரி 953.
3. முஸ்லிம் 373.

## குடும்பத்தினருக்கு நபியவர்களின் வழிகாட்டலும் சிறார் மீதுள்ள அவர்களின் கருணையும்

உமர் இப்னு அபீ ஸலமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நான் நபி (ஸல்) அவர்களின் மடியில் வளர்ந்துவந்த சிறுவனாக இருந்தேன். (ஒரு முறை) என் கை உணவுத் தட்டில் (இங்கும் அங்குமாக) அலைந்து கொண்டிருந்தது. அப்போது நபியவர்கள் என்னிடம், சிறுவனே! அல்லாஹ்வின் பெயரைச் சொல். உன் வலக் கரத்தால் சாப்பிடு. உன(து கை)க்கு அருகிலிருக்கும் பகுதியிலிருந்து எடுத்துச் சாப்பிடு! என்று சொன்னார்கள். அதன் பிறகு இதுவே நான் உண்ணும் முறையாக அமைந்தது.[1]

சிறார்கள் பெரியோருடன் சேர்ந்து உண்பதைத் தடுக்கலாகாது. மாறாக அதற்கான ஒழுக்க நெறிகளை அவர்களுக்குப் போதிப்பது அவசியம்.

ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் கூட்டாக சேர்ந்து உண்பதைத் தூண்டுவது, அதன் தலைவரென்ற ரீதியில் தந்தையுடைய பொறுப்பாகும். அதன் மூலம் உள்ளங்களில் நேசமுண்டாகி, உண்ணும் உணவிலும் முழுமையான பயன் கிடைக்கின்றது.

---

1. புஹாரி 5376, முஸ்லிம் 2022.

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "ஒரு கிராமவாசி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "நீங்கள் சிறு குழந்தைகளை முத்தமிடுகின்றீர்களா? நாங்களெல்லாம் அவர்களை முத்தமிடுவதில்லை" என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ் உமது இதயத்திலிருந்து அன்பைக் கழற்றி விட்ட பின்னர் உமக்காக நான் என்ன செய்ய முடியும்?" என்றுகேட்டார்கள்."[1]

## நபியவர்களின் உயர்ந்த குணங்களும் அழகிய நடைமுறையும்

அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நான் நபி (ஸல்) அவர்களுக்குப் பத்து ஆண்டுகள் பணிவிடை செய்தேன். அல்லாஹ்வின் மீதாணையாக! அவர்கள் என்னை (மனம் வேதனைப்படும்படி) "ச்சீ" என்றோ "இதை ஏன் செய்தாய்?" என்றோ, "நீ இப்படிச் செய்திருக்கக் கூடாதா?" என்றோ எதற்காகவும் அவர்கள் (கடிந்து) சொன்னதில்லை.[2]

நபியவர்களுக்கிருந்த வீரத்துடன் சேர்த்து, அவர்களைப் பற்றி பணியாள் புகழ்ந்ததுபோல் இன்று யாராவது ஒரு பணியாள் தனது எஜமானனைப் புகழ்வதைக் கண்டிருக்கின்றீரா?

1. புஹாரி 5998, முஸ்லிம் 2317.
2. முஸ்லிம் 2309.

நபியவர்கள் உரிமையில்லாமல் யாரையும் அடித்ததோ, இழிவு படுத்தியதோ கிடையாது. தனக்குக் கீழுள்ள பலவீனர்களான மனைவி மற்றும் பணியாளுடன் கடிந்து கொண்டதில்லை.

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் தமது கையால் எதையும் எப்போதும் அடித்ததில்லை; எந்தப் பெண்ணையும் எந்த ஊழியரையும் அடித்த தில்லை; அல்லாஹ்வின் பாதையில் (போர் செய்யும்போதே) தவிர. நபி (ஸல்) அவர்கள் (சொல்லாலோ செயலாலோ) தம்மைப் புண்படுத்திய எவரையும் அவர்கள் எப்போதும் பழிவாங்கிய தில்லை; இறைவனின் புனித(ச் சட்ட)ம் ஏதும் சீர்குலைக்கப்பட்டு,அதற்குப் பதிலாக இறைவனின் சார்பாக அவர்கள் நடவடிக்கை எடுத்தாலே தவிர (அப்போது மட்டுமே பழிவாங்குவார்கள்).[1]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "உங்களில் ஒருவரிடம் அவருடைய பணியாள் அவரது உணவைக் கொண்டு வந்தால், அவர் அப்பணியாளைத் தம்முடன் (உட்கார வைத்துக் கொள்ளட்டும். அவ்வாறு) உட்காரவைக்க

1. முஸ்லிம் 2328.

வில்லையென்றாலும் அவருக்கு ஒரு கவளம் அல்லது இரு கவளங்கள் அல்லது ஒரு வாய் அல்லது இரு வாய்கள் (அந்த உணவிலிருந்து) கொடுக்கட்டும். ஏனெனில், அதைத் தயாரிக்க அந்தப் பணியாள் பாடுபட்டார்.[1]

இச்செயலானது, பணியாளர்களின் உள்ளத்தைக் குளிர வைப்பதுடன் அவர்களுடன் பணிவாக நடந்து கொள்வதற்கான ஓர் எடுத்துக்காட்டாகவும் உள்ளது.

## தர்மம் பற்றி குடும்பத்தினருக்கு வழிகாட்டல்

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னை ஆஇஷா (ரலி)அவர்கள் கூறுகின்றார்கள் : "ஒரு பெண் வீட்டிலுள்ள உணவை வீணாக்காமல் தர்மம் செய்தால் அவள் தர்மம் செய்த நன்மையைப் பெற்றுக்கொள்வாள். அதைச் சம்பாதித்த காரணத்தால் தர்மத்தின் நன்மை அவளுடைய கணவனுக்கும் கிடைக்கும். அது போன்றே காவலாளிக்கும் கிடைக்கும். அவர்களில் யாரும் யாருடைய நன்மையையும் குறைத்திட முடியாது."[2]

1. புஹாரி 2557, முஸ்லிம் 1663.
2. புஹாரி 1425.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ மஸ்ஊத்(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "ஒரு மனிதர் (இறைவனிடம்) நன்மையை எதிர்பார்த்த வராகத் தம் குடும்பத்தினருக்குச் செலவு செய்தால் அது அவருக்குத் தர்மமாகிவிடும்".(1)

## சன்மானங்களில் நபிவழி

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள்அன்பளிப்பை ஏற்பவராகவும் அதற்கு (பதிலாக எதையாவது கொடுத்து) ஈடு செய்பவராகவும்இருந்தார்கள்.(2)

## அண்டை வீட்டாரின் உரிமை பற்றி நபியவர்கள்

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "அண்டை வீட்டார் குறித்து என்னிடம் ஜிப்ரீல் (அலை) அறிவுறுத்திக்கொண்டேயிருந்தார். எந்த அளவிற் கென்றால், (எங்கே) அண்டை வீட்டாரை எனக்கு வாரிஸாக்கி விடுவாரோ என்று கூட நான் எண்ணினேன்.(3)

அன்னை ஆஇஷா(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நான், "அல்லாஹ்வின் தூதரே! எனக்கு இரண்டு

---

1. புஹாரி 55, முஸ்லிம் 1002.
2. புஹாரி 2585.
3. புஹாரி 6014, முஸ்லிம் 2624.

அண்டை வீட்டார் உள்ளனர். அவர்களில் யாருக்கு நான் அன்பளிப்புச் செய்வது?'' என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "இருவரில் யாருடைய வீட்டு வாசல் உனக்கு நெருக்கமாக இருக்கிறதோ அவருக்கு'' என்று பதிலளித்தார்கள்.[1]

## சாந்தம், மென்மை, பொறுமை போன்றவற்றின்பால் தனது குடும்பத்தைத் தூண்டுதல்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "யூதர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு அஸ்ஸாமு அலைக்க (-உங்களுக்கு மரணம் உண்டாகட்டும்) என்று (சற்றே மாற்றி) ஸலாம் கூறிவந்தார்கள். அவர்கள் கூறியதைப் புரிந்துக் கொண்ட நான், அலைக்குமுஸ் ஸாமு வல்லஃனா (-மரணமும் சாபமும் உங்களுக்கே உண்டாகட்டும்) என்று பதில் கூறினேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா! நிதானம்! எல்லா விஷயங்களிலும் நளினத்தைக் கையாள்வதையே அல்லாஹ் விரும்புகிறான் என்று சொன்னார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் சொல்வதை நீங்கள் செவியுறவில்லையா? என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், அ(வர்கள்

1. புஹாரி 6020.

சொன்ன)தையே அவர்களுக்கு நான் பதிலாகக் கூறியதை நீ செவியுற வில்லையா? நான் 'வஅலைக்கும்' (அவ்வாறே உங்களுக்கும் ஆகட்டும்) என்று (நளினமாய்) குறிப்பிட்டேனே? என்று சொன்னார்கள்.[1]

அனஸ்(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : " (ஒரு நாள்) நபி (ஸல்) அவர்கள் தம் துணைவியரில் ஒருவரிடம் இருந்(து கொண்டிருந்)தார்கள். நபியவர்களுடைய மற்றொரு துணைவியார் உணவுப் பண்டமுள்ள தட்டு ஒன்றை (நபியவர்களுக்காகப் பணியாள் ஒருவரிடம்) கொடுத் தனுப்பினார்கள். (அப்போது) நபி (ஸல்) அவர்கள் யாரது வீட்டில் தங்கியிருந்தார்களோ அந்தத் துணைவியார் (ரோஷத்தில்) அந்தப் பணியாளின் கையைத் தட்டிவிட்டார். அந்தத் தட்டு (கீழே விழுந்து) உடைந்துவிட்டது. உடனே (ஆத்திரப் படாமல்) நபி (ஸல்) அவர்கள் அந்த உடைந்த தட்டின் துண்டுகளை ஒன்று சேர்த்தார்கள். பிறகு தட்டிலிருந்த உணவை (மீண்டும்) அதிலேயே ஒன்று சேர்க்கலானார்கள். மேலும், (அங்கிருந்த தோழர்களை நோக்கி), உங்கள் தாயார் ரோஷப்பட்டு விட்டார் என்று சொன்னார்கள். பின்னர் அந்தப் பணியாளை (அங்கேயே) நிறுத்தி விட்டு தாமிருந்த

1. புஹாரி 6395, முஸ்லிம் 5225.

வீட்டுக்கார(துணைவியா)ரிடமிருந்து மற்றொரு தட்டைக் கொண்டு வரச் செய்து, உடைபட்ட தட்டுக்குரியவரிடம் நல்ல தட்டை (மாற்றாக)க் கொடுத்து அனுப்பிவிட்டார்கள். உடைந்த தட்டை உடைக்கப்பட்ட வீட்டிலேயே வைத்துவிட்டார்கள்.[1]

மனைவியிடமிருக்கும் ரோசத்தை வைத்து அவர்களைக் குற்றம் பிடிக்கக்கூடாது என்பதற்கு இந்நபிமொழியில் சான்றுள்ளது. இந்த ரோசம் பெண்களிடம் இயற்கையாக உள்ள பண்பாகும். எனினும் வெறும் சந்தேகத்தையும் யூகங்களையும் வைத்து ரோசப்படுவதானது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதன்று.

## நபியவர்களின் உணவுப்பழக்கம்

1. **உண்ணும் போது என்ன கூறுவார்கள் ?**

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "உங்களில் ஒருவர் உணவு உட்கொள்ளும்போது "பிஸ்மில்லாஹ் ("அல்லாஹ்வின் பெயரால் உண்ணுகிறேன்) என்று கூறட்டும். (அவ்வாறு) ஆரம்பத்தில் கூற மறந்தால் (நினைவு வந்ததும்") பிஸ்மில்லாஹி பீஃ அவ்வலிஹீ வஆகிஃரிஹீ ("இவ்வுணவின் ஆரம்பத்திலும் இறுதியிலும்

1. புஹாரி 5225.

அல்லாஹ்வின் பெயரால் உண்ணுகிறேன்) என்று கூறிக்கொள்ளட்டும்".[1]

**2. உணவில் நபியவர்களின் எளிமையும் அதனைக் குறை கூறாமலிருப்பதும் :**

அபூ ஹுறைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் எந்த உணவையும் ஒருபோதும் குறை சொன்னதில்லை. ஒரு பொருள் பிடித்தால் அதை உண்பார்கள்; பிடிக்காவிட்டால் (உண்ணாமல்) விட்டுவிடுவார்கள்.[2]

இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறகின்றார்கள் : உணவைக் குறை சொல்வதானது அதனைத் தயாரித்தவருடைய மனதை நோவினை செய்வதாக அமைகின்றது.

சில கணவன்மார் தமது மனைவிக்கு முன்னிலையில் தமது வேறு உறவுக்காரப் பெண்களின் சமயலை மெச்சுவதன் மூலம், அவர்களுக்கு மத்தியில் வெறுப்பையும் பகைமையையுமே தூண்டி விடுகின்றனர்.

---

1. அபூதாவூத் 3767, திர்மிதீ 1858, இப்னு மாஜாஃ 3264. (அஷ்ஷெஹ் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.)
2. புஹாரி 3563, முஸ்லிம் 2064.

3. **உணவுப்பதார்த்தங்களை மெச்சுதல் :**

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "(ஒரு முறை) நபி (ஸல்) அவர்கள் தம் வீட்டாரிடம் குழம்பு கேட்டார்கள். அதற்கு வீட்டார், "நம்மிடம் வினாகிரி(காடி) மட்டுமே உள்ளது" என்று கூறினர். நபி (ஸல்) அவர்கள் வினாகிரி(காடி)யைக் கொண்டுவரச் சொல்லி அதை(த் தொட்டு)க்கொண்டு உண்ணலானார்கள். மேலும், "குழம்புகளில் அருமையானது வினாகிரி (காடி)யாகும்" என்று இரு முறை சொன்னார்கள்.[1]

4. **உணவு உட்கொண்டு முடிந்ததும் :**

அபூ உமாமா(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் (சாப்பிட்டு முடித்த பின்) தமது உணவு விரிப்பை எடுக்கும் போது

الحَمْدُ لِلَّهِ كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ، غَيْرَ مَكْفِيٍّ وَلاَ مُوَدَّعٍ وَلاَ مُسْتَغْنًى عَنْهُ، رَبَّنَا

"அல்ஹம்து லில்லாஹி கஸீரன் தய்யிபன் முபாரகன் ஃபீஹி, ஃகைர மக்ஃபிய்யின் வலா முவத்தஇன் வலா முஸ்தஃக்னன் அன்ஹு ரப்பனா" என்று பிரார்த்திப்பார்கள்.[2]

1. முஸ்லிம் 2052.
2. புஹாரி 5458.

**பொருள்:** அதிகமான, தூய்மையான, வளமிக்க எல்லாப் புகழும் (நன்றியும்) அல்லாஹ்வுக்கே உரியது. இறைவா! இப்புகழ் முற்றுப் பெறாதது; கைவிடப்படக் கூடாதது; தவிர்க்க முடியாதது ஆகும்.

**5. பாத்திரங்களில் மூச்சுவிடுவதைத் தடுத்துள்ளார்கள் :**

அபூ கதாதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் (பருகும்) பாத்திரத்தினுள் மூச்சு விட வேண்டாமெனத் தடை செய்தார்கள்".[1]

**6. நபியவர்கள் விரும்பும் உணவு பற்றி அவர்களின் மனைவியர் :**

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் இனிப்புப் பண்டத்தையும் தேனையும் விரும்பி வந்தார்கள்".[2]

**7. நபியவர்களின் எளிய வாழ்கை பற்றி அவர்களின் மனைவியர் :**

உர்வா இப்னு ஸுபைர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னிடம் ஆயிஷா (ரலி) அவர்கள், என் சகோதரி மகனே! நாங்கள் பிறை

1. முஸ்லிம் 267.
2. புஹாரி 5431.

பார்ப்போம்; மீண்டும் பிறை பார்ப்போம்; பிறகும் பிறை பார்ப்போம். இப்படி இரண்டு மாதங்களில் மூன்று முறை பிறை பார்ப்போம். அப்படி யிருந்தும், அல்லாஹ்வின் தூதருடைய வீட்டில் (அடுப்பில்) நெருப்பு மூட்டப்படாது என்று கூறினார்கள். நான், என் சிற்றன்னையே! நீங்கள் எதைக் கொண்டு தான் வாழ்க்கை நடத்தினீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், இரு கருப்பான பொருள்கள்: (ஒன்று) பேரீச்சம்பழம்; (மற்றொன்று) தண்ணீர் தவிர, அல்லாஹ்வின் தூதருக்கு அன்ஸாரிகளான சில அண்டை வீட்டார் இருந்தார்கள். அவர்களிடம் சில அன்பளிப்பு ஒட்டகங்கள் (மனீஹாக்கள்) இருந்தன. (அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்கு இலவசமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவர்கள் இரவல் வாங்கியிருந்தனர்.) அவர்கள் (அவற்றிலிருந்து கிடைக்கின்ற) தமக்குரிய பாலை நபி(ஸல்) அவர்களுக்குக் கொடுப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் அதை எங்களுக்கு அருந்தக் கொடுப்பார்கள் என்று கூறினார்கள்.[1]

1. புஹாரி 2567, முஸ்லிம் 2972.

### 8. சுவையான உணவுகளில் மனைவியையும் சேர்த்துக்கொள்ள விரும்புவார்கள் :

அனஸ் இப்னு மாலிக் (ர லி) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்களுக்கு அண்டை வீட்டுக்காரர் ஒருவர் இருந்தார். பாரசீகரான அவர் நன்கு (மணம் கமழ) குழம்பு சமைக்கக் கூடியவராக இருந்தார். அவர் நபி (ஸல்) அவர்களுக்காக உணவு சமைத்துவிட்டு அவர்களை அழைப்பதற்காக வந்தார். நபி(ஸல்) அவர்கள் (தம் அருகில் பசியோடு இருந்த தம் துணைவி) ஆயிஷா (ரலி) அவர்களை சைகை செய்து காட்டி "இவரும் (வரலாமா)?" என்று கேட்டார்கள், அவர் (உணவு குறைவாக இருந்ததால்), "இல்லை (வேண்டாம்)" என்று கூறிவிட்டார். நபி(ஸல்) அவர்கள் "இல்லை (அவ்வாறாயின் நானும் வரமாட்டேன்)" என்று கூறிவிட்டார்கள். அவர் நபி(ஸல்) அவர்களை அழைப்பதற்காக மறுபடியும் வந்தார். அப்போதும் நபி(ஸல்) அவர்கள், "இவரும் (வரலாமா)?" என்று (ஆயிஷா (ரலி) அவர்களை சைகை செய்து) கேட்டார்கள். அப்போதும் அவர் "இல்லை (வேண்டாம்)" என்று கூறினார். நபி(ஸல்) அவர்களும் "(அவ்வாறாயின் நானும்) இல்லை" என்று கூறிவிட்டார்கள்.அவர் நபி(ஸல்) அவர்களை அழைப்பதற்காக மறுபடியும் வந்தார். அப்போதும்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "இவரும் (வரலாமா)?" என்று (ஆயிஷா (ரலி) அவர்களை சைகை செய்து) கேட்டார்கள். அவர் மூன்றாவது முறை "சரி (வரலாம்)" என்றார். பின்னர் இருவரும் ஒருவரையொருவர் பின்தொடர்ந்து அவரது வீட்டுக்குப் போய்ச்சேர்ந்தனர்.[1]

## புறம் பேசுவதை விட்டும் தனது மனைவியரைத் தடுத்தல்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒரு மனிதரைப் பற்றி சொன்னேன். அப்போது அவர்கள் "ஒரு மனிதருடைய சொல்லைப் போன்றோ செயலைப் போன்றோ (அவரைக் குறை காணும் நோக்கில் சொல்லி அல்லது செய்து) காட்டுவதும், எனக்கு இவ்வாறு இவ்வாறெல்லாம் இருந்தால் (நன்றாயிருக்குமே) என்று கூறவதும் எனக்கு விருப்பமில்லை" என்றார்கள். அன்னையவர்கள் கூறுகின்றார்கள்: "அன்னை ஸபிய்யா(ரலி) அவர்களைப் பற்றி, "அல்லாஹ்வின் தூதரே அவர்கள் குட்டையான பெண் " என்று சைகை செய்து கூறினேன். "அப்போது நபியவர்கள் "நீர் உங்களது நற்செயல்களை ஒரு வார்த்தையுடன்

1. முஸ்லிம் 2037.

கலந்து விட்டீர். கடல் நீரை அவ்வார்த்தையுடன் கலந்தால் அதன் நிறமே மாறிவிடும் என்றார்கள்".[1]

## மனைவியரைக் கையாள்வதில் நபியவர்களின் வழிகாட்டலும் சில எடுத்துக்காட்டல்களும்

பெண்கள் தவறிழைக்கும் பட்சத்தில் அவர்களுக்காகப் பொறுத்துக் கொள்ளும்படி நபி(ஸல்) அவர்கள் ஏவியுள்ளார்கள். "இறை நம்பிக்கை கொண்ட ஓர் ஆண் இறை நம்பிக்கை யுள்ள ஒரு பெண்ணை (முழுமையாக) வெறுத்து ஒதுக்க வேண்டாம். அவளிடமிருந்து அவர் ஒரு குணத்தை வெறுத்தாலும், மற்றொரு குணத்தைக் கண்டு திருப்திகொள்ளட்டும்" என்று கூறினார்கள்".[2]

மனைவியிடமிருந்து நிறைகளைத் தேடி, குறைகளைப் புறக்கணிப்பதன் பால் அழைக்கும் ஒரு நல்ல நெறிமுறையாக மேற்கண்ட நபிமொழி திகழ்கின்றது. எதிர்மறைகளைத் துருவித் துருவி ஆராய்வது, குடும்பத்தில் பிளவையும் வெறுப்பையுமே ஏற்படுத்துகின்றது. இறைவன் பின்வருமாறு கூறுகின்றான் :

---

1. அபூதாவூத் 4875, திர்மிதீ 2502. (அஷ்ஷேஹ் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.)
2. முஸ்லிம் 1469.

﴿ فَإِن كَرِهْتُمُوهُنَّ فَعَسَىٰٓ أَن تَكْرَهُوا۟ شَيْـًٔا وَيَجْعَلَ ٱللَّهُ فِيهِ خَيْرًا كَثِيرًا ﴾ النساء: ١٩

"நீங்கள் அவர்களை வெறுத்தால் , நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை அமைத்திருப்பான்".(நிஸா :19)

மனைவியைத் துன்புறுத்துபவன் சிறந்த விசுவாசியல்லவென நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## தனது மனைவியரைக் கையாள்வதில் இதோ நபியவர்களின்சில எடுத்துக்காட்டல்கள்

1. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "உங்களில், தனது மனைவியரிடத்தில் சிறந்தவரே உங்களில் சிறந்தவர். எனது மனைவியரிடத்தில் நான் சிறந்தவனாக உள்ளேன். உங்களுடைய நெருங்கிய தோழர் மரணித்தால் அவரை (ப்பற்றிப் பேசுவதை) விட்டுவிடுங்கள்.[1]

2. அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறு கின்றார்கள்: "எனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும்

1. திர்மிதீ 3895. (அஷ்ஷேஹ் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.)

போது நபி (ஸல்) அவர்கள் என்னை துணி கட்டிக் கொள்ளுமாறு பணிப்பார்கள். (நான் அவ்வாறே செய்து கொள்வேன்.) அப்போது அவர்கள் என்னை அணைத்துக் கொள்வார்கள்".[1]

3. மேலும் அன்னையவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் நான் மாதவிடாயுடன் இருக்கும் போதும் எனது மடியில் தமது தலையை வைத்தபடி திருக்குர்ஆன் ஓதுவார்கள்".[2]

4. நபி (ஸல்) அவர்களின் துணைவியார் மைமூனா (ரலி) அவர்கள் கூறியதைத் தான் கேட்டதாகஇப்னு அப்பாஸ் (ரலி) அவர்களால் உரிமையிடப்பட்ட குரைப் (ரஹ்) என்பவர் கூறுகின்றார்:"எனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் போது என்னுடன் நபி (ஸல்) அவர்கள் படுத்திருப் பார்கள். எனக்கும் அவர்களுக்கும் இடையே ஓர் ஆடையே (தடையாக) இருக்கும்".[3]

5. அன்னை ஆஇஷா(ரலி) அவர்கள் கூறு கின்றார்கள்: "எனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் போது நான் (ஏதேனும் பானத்தைப்) பருகிவிட்டு அதை நபி (ஸல்) அவர்களிடம் கொடுப்பேன்.

---

1. புஹாரி 300.
2. புஹாரி 297, முஸ்லிம் 301.
3. முஸ்லிம் 295.

அப்போது அவர்கள் நான் வாய் வைத்த இடத்தில் தமது வாயை வைத்து அருந்துவார்கள். மாதவிடாய் ஏற்பட்டிருந்த நான் இறைச்சியுள்ள எலும்புத் துண்டைக் கடித்துவிட்டு அதை நபியவர்களிடம் கொடுப்பேன். நான் வாய் வைத்த இடத்தில் அவர்கள் தமது வாயை வை(த்துப் புசி)ப்பார்கள்".[1]

மாதவிடாய்ப் பெண்களுடன் சேர்ந்து உறங்குவது, உண்ணுவது போன்ற விடயங்கள் பற்றி மேற்கூறப் பட்ட பொன்மொழிகளில் உள்ளன. யூதர்களுக்கு மாற்றமாக நாம் இவ்வாறு நடந்து கொள்வதால் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் ஒரு வித நோவினையை அனுபவிக்கும் அவளுக்கு மன ஆர்தல் கிடைக்கின்றது.

6. மேலும் அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் நோன்பி ருக்கும் நிலையிலேயே தனது மனைவியரில் ஒருவரை முத்தமிடக்கூடியவராக இருந்தார்கள் " என்று கூறிவிட்டு அதனுடன் சம்பந்தப்பட்டவர் தாம்தான் என்பதை உணர்த்தும் முகமாக அன்னையவர்கள் சிரித்தார்கள்.[2]

1. முஸ்லிம் 300.
2. புஹாரி 1928.

7. அஸ்வத் (ரஹ்) கூறுகின்றார் :"நபி (ஸல்) அவர்கள் வீட்டில் என்ன (வேலை) செய்து வந்தார்கள்? என்று நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள், தம் வீட்டாருக்காக (வீட்டு) வேலைகளைச் செய்து வந்தார்கள். தொழுகை நேரம் வந்ததும் (வேலைகளை விட்டுவிட்டு) தொழுகைக்குப் புறப் பட்டுவிடுவார்கள் என்று பதிலளித்தார்கள்.[1]

சில கணவன்மாரிடமிருந்து நாம் கேள்விப்படும் அதிர்ச்சியான தகவல் என்னவெனில், அவர்கள் வீட்டிற்கு வெளியே அல்லது தமது விருந்தினருடன் இரவு முழுதும் விழித்திருந்து கதைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், அதைச் செய், இதைச் செய்யாதே என்று வெறும் இயக்கும் ஆணைகளை மாத்திரமே செவிமடுக்கும் தனது மனைவியுடன் அவ்வாறு அதிக நேரம் செலவிடுவ தில்லை. அதிலும் தமது மனைவியுடன் இவ்வாறு உட்கார்ந்து மனம் விட்டுப்பேசுவதைத் தாழ்வு மனப்பான்மையுடன் நோக்கும் சில கணவன்மாரும் உளர்.

1. புஹாரி 676.

இது போன்றவர்களுக்கு நாம் சொல்ல விரும்புவது என்னவென்றால், நபி (ஸல்) அவர்கள் தனது அதிக வேலைப் பளுக்களுக்கு மத்தியில் ஒரு முறை தனது மனைவி ஆஇஷா (ரலி) அவர்களுடன் இரவில் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள். அறியாமைக்கால 10 பெண்களுடைய சம்பவங்களை ஒன்றன்பின் ஒன்றாக அன்னையவர்கள் நபியவர்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நபியவர்களோ அவ்வனைத்தையும் புன்முறுவலுடன் செவி சாய்த்துக் கொண்டிருக்கின்றார்கள். "உம்மு ஸர்ஃ" வுடைய ஹதீஸ் என்று பெயர் பெற்ற இந்த நபிமொழி மிகவும் நீளமானது. சமூகப் பொறுப்புக்களோ தூதுத்துவத்தின் கடமைகளோ மனைவிக்கு செவிசாய்த்து மகிழ்ச்சியுடன் உரையாடுவதை விட்டும் நபியவர்களைத் தடுக்கவில்லை.

இமாம் நவ்வீ (ரஹ்) கூறுகின்றார்கள் :"உம்மு ஸர்ஃ" வுடைய ஹதீஸில் பல படிப்பினைகள் உள்ளதாக அறிஞர்கள் கூறகின்றனர். மனைவியுடன் அழகாக நடந்து கொள்வதும் அதிலுள்ளது தான்.

சில கணவன்மார் தமது மனைவியுடன் சில சந்தர்ப்பங்களில் நளினமாக நடந்து கொள்வார்கள். இன்னும் சில சமயங்களில் அவ்வாறு நடக்க மாட்டார்கள். கணவன் வேலையிலிருந்து திரும்பி னாலோ அல்லது இரவில் தாமதமாக வந்தாலோ மனைவியின் பேச்சைத் தாங்கிக்கொண்டு செவிசாய்க்க மாட்டார்கள். ஆனால் நபியவர்களோ அவ்வாறிருக்கவில்லை. அவர்கள் தமது மனைவி யருடன் நளினமாகவும் மென்மையாகவும் நடப்பதற் கென்று குறிப்பிட்ட நேரம் கிடையாது. இதோ ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் (முதுமையடைந்த பின்) உட்கார்ந்து (இரவுத் தொழுகை) தொழுதிருக் கிறார்கள். அப்போது உட்கார்ந்தபடியே ஓதுவார்கள். ஓத வேண்டியதில் முப்பது அல்லது நாற்பது வசனங்கள் எஞ்சியிருக்கும் போது எழுந்து நின்று அதை நிலையிலேயே ஓதிவிட்டு ருகூஉச் செய்வார்கள். பின்னர் ஸஜ்தாச் செய்வார்கள். இரண்டாம் ரக்அத்திலும் இது போன்றே செய்வார்கள். தொழுது முடித்ததும் பார்ப்பார்கள். அப்போது நான் விழித்துக் கொண்டிருந்தால் என்னுடன் பேசிக் கொண்டிருப்பார்கள். நான்

உறங்கிக் கொண்டிருந்தால் அவர்களும் படுத்துக் கொள்வார்கள்.[1]

ஒருவர் தனது மனைவியுடன் இரவின் கடைசி நேரங்களில் உரையாடிக் கொண்டிருக்கிறார் என்று சிலரிடம் கூறப்பட்டால், இது ஸஹர் நேரம், இரவுத்தொழுகை தொழுது பிரார்த்திக்கும் நேரம் என அவர்கள் பதிலளித்து விடுவார்கள். அவர்களுடைய கூற்று உண்மையானதுதான். மனைவியுடன் உரையாடுவதும் மகத்தான வணக்கங்களிலொன்று என்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

## நபியவர்களின் கனிவு

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறியதாக உர்வா இப்னு ஸுபைர் (ரஹ்) கூறுகின்றார் :"ஒரு மனிதர் (எங்கள் வீட்டுக்குள் வர) நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அவரை உள்ளே வரச் சொல்லுங்கள். அந்தக் கூட்டத்தாரிலேயே (இவர்) மோசமானவர்" என்று அவரைப் பற்றிச் சொன்னார்கள். (வீட்டுக்கு உள்ளே) அவர் வந்தபோது (எல்லாரிடமும் பேசுவதைப் போன்றே) அவரிடமும் நபி (ஸல்) அவர்கள் கனிவாகப்

1. புஹாரி 1119, முஸ்லிம் 731.

பேசினார்கள். (அவர் பேசிவிட்டு எழுந்து சென்றதும்) நான், "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் அவரைக் குறித்து ஒரு விதமாகச் சொன்னீர்கள். பிறகு அவரிடமே கனிவாகப் பேசினீர்களே?" என்று கேட்டேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், "ஆயிஷா! அல்லாஹ்விடம் மறுமை நாளில் தகுதியால் மிகவும் மோசமானவர் யாரெனில், மக்கள் எவரது அருவருப்பான பேச்சுகளிலிருந்து (தம்மைத்) தற்காத்துக் கொள்ள ஒதுங்கிக் கொள்கிறார்களோ அவர்தான். (அருவருப்பான பேச்சுகள் பேசும் அவர் குறித்து எச்சரிக்கை செய்யவே அவரைப் பற்றி அவ்வாறு சொன்னேன்)" என்றார்கள்.[1]

நபியவர்களோ கண்ணியமிக்கவர்கள். அவர்கள் தீயவர்களுடன் நடந்து கொள்ளும் முறைதான் இது. அப்படியென்றால் ஏனையோருடன் எவ்வளவு கனிவாக நடந்து கொள்வார்கள்?

1. புஹாரி 6032, 6131, முஸ்லிம் 2591.

## திருமணவிருந்தில் சிரத்தை எடுக்காமலிருத்தல்

அனஸ் இப்னு மாலிக் (ர லி) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் கைபருக்கு(ப் படையெடுத்து) வந்து, அல்லாஹ் (அங்குள்ள) கோட்டையை அவர்களுக்குத் திறந்து விட்ட போது, ஸஃபிய்யா பின்த் ஹுயை என்பவரின் அழகு பற்றிக் கூறப்பட்டது. புது மணப்பெண்ணாக இருந்த அவருடைய கணவர் கொல்லப்பட்டுவிட்டார். அவரை நபி (ஸல்) அவர்கள் (போர்ச் செல்வத்தில்) தமது பங்காகப் பெற்று (மணந்து) கொண்டார்கள். அவரை நபி (ஸல்) அவர்கள் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். சத்துஸ்ஸஹ்பா எனுமிடத்தை நாங்கள் அடைந்த போது அவர் மாதவிடாயிலிருந்து தூய்மையடைந்தார். நபி (ஸல்) அவர்கள் அவருடன் தாம்பத்திய உறவைத் தொடங்கினார்கள். பிறகு (பேரீச்சம் பழம், நெய், பாலாடைக் கட்டி ஆகியவற்றைக் கலந்து) ஹைஸ் எனப்படும் ஓர் உணவைத் தயாரித்து சிறிய தோல் விரிப்பில் வைத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் உம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு அறிவியும்! என்றார்கள். ஸஃபிய்யா (ரலி) அவர்களை மணந்ததற்காக நபி (ஸல்) அவர்கள் வழங்கிய மணவிருந்தாக அது அமைந்தது! பிறகு நாங்கள்

மதீனாவை நோக்கிப் புறப்பட்டோம். நபி (ஸல்) அவர்கள் ஒட்டகத்தின் மேல், ஒரு போர்வை (போன்ற அங்கி)யால் ஸஃபிய்யா (ரலி) அவர்களைச் சுற்றி திரை அமைத்தார்கள். பிறகு ஒட்டகத்தின் அருகில் அவர்கள் அமர்ந்தார்கள். ஸஃபிய்யா (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களின் முழங்கால் மீது தமது காலை வைத்து ஒட்டகத்தில் ஏறினார்கள்.[1]

இந்த அழகான காட்சி, நபியவர்கள் தனது மனைவியருடன் நடந்து கொள்ளும் அழகிய முறையையே எடுத்துக்காட்டுகின்றது. அவரோ ஒரு வெற்றித்தளபதி, தூதராக அனுப்பட்ட ஒரு நபி. அவ்வாறிருந்தும் இச்செயல் அவருடைய எந்த மதிப்பையும் சற்றேனும் குறைக்கவில்லை. மனைவி நோயுற்றிருக்கும் போதும், கருவுற்றிருக்கும் போதும், அவளுடைய நோயை இலகுவாக்கும் பொருட்டு அவளுக்கு உதவி செய்வதும் மனைவியுடன் அழகிய முறையில் நடப்பதில் உள்ளடங்கும் என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

1. புஹாரி 4211.

## நபியவர்களின் சிரமங்களில் மனைவியர் பங்கெடுத்தல்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நபி (ஸல்) அவர்களு க்கு ஆரம்பமாக வந்த வேத அறிவிப்பு (வஹீ) தூக்கத்தில் கண்ட உண்மைக் கனவுகளாகவே இருந்தது. இந்நபிமொழியின் தொடர்ச்சியில்.......

(தொடர்ந்து ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்:) பிறகு (அச்சத்தால்) அந்த வசனங்களுடன் இதயம் படபடக்க அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், (தம் துணைவியார்) கதீஜா பின்த் குவைலித் (ரலி) அவர்களிடம் வந்து என்னைப் போர்த்தி விடுங்கள்; என்னைப் போர்த்தி விடுங்கள் என்றார்கள். அவ்வாறே வீட்டாரும் அவர்களைப் போர்த்திவிட அச்சம் அவர்களை விட்டகன்றது. பின்னர் கதீஜாவிடம் நடந்தவற்றைத் தெரிவித்து விட்டு எனக்கேதும் நேர்ந்து விடுமோ என நான் அஞ்சுகிறேன் என்று சொன்னார்கள்.

அதற்கு கதீஜா (ரலி) அவர்கள், அப்படியொன்றும் ஆகாது. அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களை ஒரு போதும் அல்லாஹ் இழிவுபடுத்த மாட்டான்; (ஏனெனில்) தாங்கள் உறவுகளைப் பேணி நடந்து கொள்கிறீர்கள்; (சிரமப்படுவோரின்) பாரத்தைச்

சுமக்கிறீர்கள்; வறியவர்களுக்காகப் பாடுபடுகிறீர்கள்; விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள்; சோதனையில் ஆட்பட்டோருக்கு உதவி செய்கிறீர்கள் (அதனால் நீங்கள் அஞ்ச வேண்டிய தில்லை) என்று (ஆறுதல்) சொன்னார்கள்……[1]

இவ்வாறுதான் ஒரு மனைவி இருக்க வேண்டும். நற்காரியங்களில் கணவனுக்கு உதவ வேண்டும். அவருக்குத் துன்பங்கள், கவலைகள் போன்ற சோதனைகள் ஏற்படும்போது அச்சுமையைக் குறைக்க வேண்டும். இவ்வாறான சோதனைகள் ஏற்படும்போது அல்லாஹ்வின்பால் மீள வழிகாட்ட வேண்டும்.

## பெண்பிள்ளைகளை வளர்ப்பதில் நபியின் வழிகாட்டலும்

## அவ்வாறு செய்வோரின் சிறப்பும் கூலியும்

நபியவர்கள் துணைவி அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :என்னிடம் ஏதேனும் (தரும்படி) கேட்டு ஒரு பெண்மணி வந்தார். அவருடன் இரு பெண் குழந்தைகள் இருந்தனர். அப்போது ஒரே ஒரு பேரீச்சம் பழத்தை தவிர வேறெதுவும் அவருக்கு என்னிடம் கிடைக்க வில்லை. ஆகவே, நான் அதை அவருக்குக்

1. புஹாரி 03.

கொடுத்தேன். உடனே அதனை அவர் இரண்டாகப் பிரித்து குழந்தைகள் இருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். பிறகு அப்பெண்மணி எழுந்து சென்று விட்டார். பின்னர் நபி (ஸல்) அவர்கள் வந்தார்கள். அவர்களிடம் இது பற்றி நான் சென்னேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "யார் இந்தப் பெண் குழந்தைகளில் ஒன்றுக்குப் பொறுப்பேற்று நன்மை புரிவாரோ அவருக்கு அந்தக் குழந்தைகள் நரகத்திலிருந்து தடுக்கும் திரையாக இருப்பார்கள்" என்றார்கள்.[1]

மேற்கண்ட நபிமொழியிலிருந்து பெறப்படும் பாடங்கள் :

1. தேவையுடையோருக்குச் சிறிதளவேனும் தர்மம் செய்தல்.

2. பெண்பிள்ளைகளுக்கு நலவு செய்வதில் மகத்தான சிறப்புண்டு. அதுதான், அவர்கள் நரகில் நுழையாமல் திரையாக இருப்பார்கள்.

3. பெண்பிள்ளைகளை சிறந்தமுறையில் வளர்ப்பதென்பது அல்லாஹ் தனது அடியார்களுக்கு வைத்துள்ள ஒரு சோதனையாகும்.

1. புஹாரி 5995, முஸ்லிம் 2629.

## உறவினர்களுடன் சேர்ந்து நடப்பதுபற்றி நபியவர்கள்

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :உறவு (இறையருளின்) ஒரு கிளையாகும். ஆகவே, "அதனுடன் யார் ஒட்டி வாழ்கின்றாரோ அவருடன் நானும் உறவு பாராட்டுவேன். அதை யார் முறித்துக் கொள்கிறாரோ அவரை நானும் முறித்துக் கொள்வேன்" (என்று உறவைப் படைத்த போது இறைவன் சொன்னான்).[1]

## நபியவர்களின் பிரார்த்தனைகள் பற்றி மனைவியர்

நபியவர்கள் கேட்கும் பிரார்த்தனைகள் பல உள்ளன. எனினும் அவற்றில் பல அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் வாயிலாகவே வந்துள்ளன.

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறு கின்றார்கள் :நபி (ஸல்) அவர்கள் தொழுகையில் துஆ செய்யும் போது, இறைவா! பாவத்திலி ருந்தும், கடனிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று கூறுவார்கள். (இதைச் செவியுற்ற) ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம்,

1. புஹாரி 5989.

அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் கடன் படுவதிலிருந்து இவ்வளவு அதிகமாகப் பாதுகாப்புத் தேடுவதற்குக் காரணம் என்ன? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், மனிதன் கடன்படும் போது பொய் பேசுகிறான்; வாக்குறுதி தந்து (அதற்கு) மாறு செய்கிறான்என்று பதிலளித்தார்கள்.[1]

பர்வா இப்னு நௌபல் அல்அஷ்ஜஈ (ரஹ்) கூறுகின்றார் :நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம், நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டிவந்த பிரார்த்தனைகள் குறித்துக் கேட்டேன். ஆயிஷா (ரலி) அவர்கள்,

اَللّهمّ إنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ ما عَمِلْتُ ومِنْ شَرِّ ما لمْ أعْمَلْ

"அல்லாஹும்ம! இன்னீ அஊது பிக்க மின் ஷர்ரி மா அமில்த்து, வ மின் ஷர்ரி மா லம் அஃமல்' என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்திப்பார்கள் எனப் பதிலளித்தார்கள்.[2]

**பொருள்**: இறைவா! நான் செய்தவற்றின் தீங்கிலிருந்தும் நான் செய்யத் தவறியவற்றின் தீங்கிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.)

1. புஹாரி 2397, முஸ்லிம் 589.
2. முஸ்லிம் 2716.

## ஓதிப்பார்த்தல், இரக்கம், அழுகை போன்றவற்றில் நபியவர்கள்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :நபி (ஸல்) அவர்கள்

امْسَحِ البَأسَ رَبَّ النَّاسِ، بِيَدِكَ الشِّفَاءُ، لاَ كَاشِفَ لَهُ إِلَّا أَنْتَ

"இம்ஸஹில் பஃஸ். ரப்பன்னாஸ்! பியதிகஷ் ஷிஃபாஉ. லா காஷிஃப லஹு இல்லா அன்த்த" என்று கூறி ஓதிப்பார்த்து வந்தார்கள்.[1]

**பொருள்**: மக்களை இரட்சிப்பவனே! துன்பத்தைத் துடைப்பாயாக! நிவாரணம் உன் கரத்தில்தான் உள்ளது. உன்னைத் தவிர துன்பத்தை நீக்குபவர் வேறு எவரும் இல்லை.

அன்னை ஆஇஷா(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :நபி (ஸல்) அவர்கள் கண்ணூருவி(ன் தீய விளைவி)லிருந்து விடுபட ஓதிப்பர்த்துக் கொள்ளும் படி கட்டளையிட்டார்கள்' அல்லது எனக்குக் கட்டளையிட்டார்கள்.'[2]

அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் அபூஸைப் அல்கைன் என்பவருடைய வீட்டிற்குச்

1. புஹாரி 5744, முஸ்லிம் 2191.
2. புஹாரி 5738, முஸ்லிம் 2195.

சென்றோம். அவர் (நபியவர்களின் புதல்வர்) இப்ராஹீமுடைய செவிலித்தாயின் கணவராவார். நபி (ஸல்) அவர்கள் இப்ராஹீமை எடுத்து முத்தமிட்டு உச்சிமுகர்ந்தார்கள். பின்பு மற்றோர் சந்தர்ப்பத்தில் அங்கு சென்றோம். (அவ்வேளை) இப்ராஹீம் மரணத் தருவாயில் மூச்சை இழுத்து விட்டுக் கொண்டிருந்தார். நபி (ஸல்) அவர்களுடைய இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது. அப்போது அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே நீங்களுமா (அழுகின்றீர்கள்)?" என வினவினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் : "அவ்பின் மகனே இதுதான் இரக்கம்" என்று கூறிவிட்டு, தொடர்ந்து: "நிச்சயமாக கண்ணிலிருந்து கண்ணீர் வழிகின்றது, உள்ளம் கவலையடைகின்றது, எங்களுடைய நாயன் பொருந்திக் கொள்வதைத் தவிர எதையும் நாங்கள் கூறமாட்டோம். இப்ராஹீமே உங்கள் பிரிவால் நாம் கவலையடைகிறோம்" என்றார்கள்.[1]

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :எங்களில் ஒரு மனிதர் நோய் வாய்ப்பட்டால், நபி (ஸல்) அவர்கள் தமது வலக் கரத்தால் அவரைத் தடவிவிட்டுப் பிறகு,

---

1. புஹாரி 1303.

أَذْهِبِ الْبَأسَ رَبَّ النَّاسِ، وَاشْفِ أَنْتَ الشَّافِي، لاَ شِفَاءَ إِلَّا شِفَاؤُكَ، شِفَاءً لاَ يُغَادِرُ سَقَمًا

"அத்ஹிபில் பா:ஸ் ரப்பந் நாஸ். வஷ்:பி அன்த்தஷ் ஷா:பீ. லா ஷி:பாஅ இல்லா ஷி:பாஉக ஷி:பாஅன் லா யு:காதிரு ஸகமன்" என்று பிரார்த்திப்பார்கள்.[1]

**பொருள்**: மனிதர்களைப் படைத்துப் பராமரிப்பவனே! நோயைப்போக்கி அறவே நோயில் லாதவாறு குணமளிப்பாயாக. நீயே குணமளிப்பவன். உன் நிவாரணத்தைத் தவிர வேறு நிவாரணம் இல்லை.

அன்னை உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :"ஒரு முஸ்லிமுக்கு ஏதேனும் துன்பம் நேரும்போது அவர் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்' (நிச்சயமாக நாம் அல்லாஹ் வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்) என்றும், "அல்லா ஹும்ம:ஜுர்னீ :பீ முஸீபத்தீ வஅக்லி:ப் லீ கைரம் மின்ஹா' (இறைவா, எனக்கேற்பட்ட இத்துன்பத்தை நான் பொறுமையுடன் ஏற்றதற்கு மாற்றாக எனக்கு நன்மையை வழங்குவாயாக!) என்றும் கூறினால்,

1. புஹாரி 5750, முஸ்லிம் 2191.

அதற்கு ஈடாக அதைவிடச் சிறந்ததை அவருக்கு அல்லாஹ் வழங்காமல் இருப்பதில்லை" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(என் முதல் கணவர்) அபூஸலமா (ரலி) அவர்கள் இறந்தபோது நான் "அபூஸலமாவைவிட முஸ்லிம்களில் சிறந்தவர் எவர் இருக்க முடியும்? நபி (ஸல்) அவர்களிடம் முதன்முதலில் நாடு துறந்து வந்த குடும்பம் (அவருடைய குடும்பம்தான்)" என்று கூறினேன். ஆயினும், (நபி (ஸல்) அவர்களது கூற்றுக்கேற்ப) இன்னா லில்லாஹி... என்று நான் சொன்னேன். அவ்வாறே அவருக்கு ஈடாக அல்லாஹ் தன்னுடைய தூதரையே (இரண்டாவது கணவராக) எனக்கு வழங்கினான்.[1]

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :நபி (ஸல்) அவர்கள் ஹஸன் (ரலி), ஹுஸைன் (ரலி) ஆகியோருக்காக அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடக்கூடியவர்களாக இருந்தார்கள். "நிச்சயமாக உங்களிருவருடையவும் தந்தை (இப்ராஹீம் (அலை) தனது புதல்வர்களான இஸ்மாஈல் (அலை), இஸ்ஹாக் (அலை) ஆகியோருக்காக பாதுகாவல் தேடினார்கள்" என்று கூறிவிட்டு,

1. முஸ்லிம் 918.

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّةِ، مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ، وَمِنْ كُلِّ عَيْنٍ لاَمَّةٍ .

"அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மதி, மின் குல்லி ஷைதானின் வஹாம்ம:, வமின் குல்லி ஐனின் லாம்ம:" என்று கூறினார்கள்.[1]

**பொருள்** : அனைத்து ஷைத்தான்கள், விசஜந்துக்கள், தாக்கம் செலுத்தும் கண்ணூறுகளை விட்டும் அல்லாஹ்வின் பரிபூரணமான வார்த்தை களைக் கொண்டு பாதுகாவல் தேடுகிறேன்.

சிறார்களுக்கு கண்ணூர் விரைவில் பாதிக்கு மென்பதால், நபியவர்களிடமிருந்து அறிவிக்கப் பட்டுள்ள (ஸஹீஹான) நாளாந்த பிரார்த்தனைகள் மூலம் அல்லாஹ்விடம் தமது குழந்தைகளுக்காகப் பாதுகாவல் தேடுவது பெற்றோர் மீது கடமையாகும்.

என்னுடைய அபிப்பிராயம் என்னவெனில், வீடுகளில் குடும்பத்தினர் உட்கார்ந்து கதைக்கு மிடங்களில் காலை, மாலை திக்ருகளை எழுதித் தொங்கவிடுவது சாலச்சிறந்தது.

இப்னுல் கைய்யிம் (ரஹ்) கூறியுள்ளார்கள் : யாருக்கு கண்ணூர் பாதிக்குமென்று அஞ்சப் படுகிறதோ அவருடைய (மக்களைக் கவரும் ) சிறப்பம்சங்களை மறைப்பதன் மூலம் – அதுவும்

1. புஹாரி 3371.

குறிப்பாக, பெருநாட்கள் போன்ற பொது நிகழ்வுகளில் – தற்காப்பு எடுத்துக் கொள்வதும் கண்ணூருக்கான பரிகாரங்களில் ஒன்றுதான்.

**சிக்கலும் தெளிவும் :** ஒரு குழந்தை வழமைக்கு மாறாக அழுது கொண்டிருந்தால் - அதுவும் குறிப்பாக அதன் அழுகைக்கான காரணம் அறியப்படாமலிருந்தால் - சிலவேளை அக்குழந்தை கண்ணூரால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : ஒரு தடவை நபியவர்கள் (வீட்டினுள்) நுழையும்போது அழுதுகொண்டிருக்கும் குழந்தையின் ஓசையைக் கேட்டார்கள். அப்போது அவர்கள் "உங்களுடைய இக்குழந்தைக்கென்ன? அழுதுகொண்டேயிருக் கின்றது. கண்ணூருக்காக நீங்கள் அதற்கு ஓதிப்பார்க்கக் கூடாதா? என்றார்கள். (1)

1. முஸ்னத் அஹ்மத் 24442. (அஷ்ஷேஹ் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.)

## தடுக்கப்பட்டவைகளை வீட்டிலிருந்து அப்புறப்படுத்தல்

அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறியதாக இம்ரான் இப்னு ஹித்தான் கூறுகின்றார் :நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டில் சிலுவை போன்ற உருவங்கள் உள்ள எந்தப் பொருளையும் சிதைக்காமல் விட்டுவைத்த தில்லை.[1]

மேலும் இசைக்கருவிகள் வாசித்தல் மற்றும் இசை ஒலிகளைத் தடுப்பதும் அவசியமாகும்.

## தொழுகை, குழந்தைகளுக்கான நன்கொடை, மற்றும்அமல்களைத் தொடர்ந்து செய்தல் ஆகியவற்றில்நபியவர்களின் வழிகாட்டல்

நபி (ஸல்) அவர்கள் கூறியதாகஅன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களில் எவரேனும் தொழுது கொண்டிருக்கும்போது கண்ணயர்ந்து விடுவாரானால் அவரைவிட்டும் உறக்கக் கலக்கம் விலகும் வரை (தொழுகையி லிருந்து பிரிந்து) அவர் உறங்கட்டும்! ஏனெனில், உங்களில் ஒருவர் உறங்கியவாறே தொழுவா ரானால் அவர் தம்மையும் அறியாமல் பாவ

1. புஹாரி 5952.

மன்னிப்புக் கோர அது தமக்கெதிரான பிரார்த்தனை யாகக்கூட ஆகிவிடலாம்.[1]

மேலும் அன்னையவர்கள் கூறுகின்றார்கள் :நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :நேர்மையோடு (நடுநிலையாகச்) செயல்படுங்கள். நிதானமாகச் செயல்படுங்கள். (வரம்பு மீறிவிடாதீகள்.) அறிந்து கொள்ளுங்கள்: உங்களில் யாரையும் அவரது நற்செயல் சொர்க்கத்தில் ஒரு போதும் நுழை விக்காது. (மாறாக, அல்லாஹ்வின் தனிப்பெரும் கருணையாலேயே எவரும் சொர்க்கம் புக முடியும்.) நற்செயல்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்ப மானது, (எண்ணிக்கையில்) குறைவாக இருந்தாலும், (தொடர்ந்து செய்யப்படும்) நிலையான நற்செயலே ஆகும்.[2]

நுஃமான் இப்னு பஷீர் (ரலி) அவர்கள் மிம்பரில் நின்றுகொண்டு சொல்வதைத் தான் கேட்டதாக ஆமிர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் :என் தந்தை அன்பளிப்பு ஒன்றை எனக்குக் கொடுத்தார். என் தாயார் அம்ரா பின்த்து ரவாஹா (ரலி) அவர்கள் என் தந்தையிடம், நீங்கள் இதற்கு அல்லாஹ்வின் தூதரை சாட்சியாக ஆக்காதவரை நான் இதை ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கூறினார்கள். என்

1. புஹாரி 212, முஸ்லிம் 786.
2. புஹாரி 6464, முஸ்லிம் 2812.

தந்தை அல்லாஹ்வின் தூதரிடம் சென்று, அல்லாஹ்வின் தூதரே! நான் அம்ரா பின்த்து ரவாஹாவின் வாயிலாக, எனக்குப் பிறந்த என் மகனுக்கு அன்பளிப்பு ஒன்றைக் கொடுத்தேன்;அவள் (என் மனைவி) தங்களை சாட்சியாக ஆக்கும் படி எனக்குக் கட்டளையிட்டாள் என்று கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், உங்கள் மற்ற பிள்ளைகளுக்கும் இதே போன்று கொடுத்துள் ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு என் தந்தை, இல்லை என்று பதிலளித்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள், அவ்வாறெனில் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்கள் பிள்ளைகளிடையே நீதி செலுத்துங்கள் என்று கூறினார்கள். இதைக் கேட்ட என் தந்தை உடனே திரும்பி வந்து, தனது அன்பளிப்பை ரத்து செய்தார்.[1]

பரிசு, நன்கொடை போன்றன குழந்தைகளுக்கு மத்தியில் சரிசமமாகவே பங்கிட வேண்டும். ஆனால், நேசமென்பது மனிதனின் கட்டுப்பாட்டில் இல்லை. என்றாலும் அதனை குழந்தைகளுக்கு முன்னிலையில் வெளிக்காட்டக் கூடாது.

1. புஹாரி 2587, முஸ்லிம் 1623.

## முடிவுரை

இறுதியாக, நபி (ஸல்) அவர்களது வாழ்கை பற்றிய இச்சிறு நூலை ஏற்று, அதனை உளத்தூய்மையுடன் செய்த நற்காரியமாக ஆக்கும்படி கண்ணியமிக்க அர்ஷின் நாயனிடம் வேண்டுகின்றேன். மேலும், இதனை அச்சிட்டு, வெளியிடுவதில் பங்காற்றிய அனைவரிடமிருந்தும் (அச்செயலை ஏற்றுக்கொள்ளும்படி அவனிடம் வேண்டுகின்றேன்).

எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

**இறைப்புகழால் இந்நூல் முற்றுப்பெற்று விட்டது**